# விழி

சர்வதேச சிறுவர் தினத்தை
முன்னிட்டு வெளியிடப்படும்
சிறப்பு மலர் - 2011




வெளியீடு
**பிரதேச சிறுவர் கண்காணிப்புக் குழு**
பிரதேச செயலகம், மண்முனைப்பற்று.

அனுசரணை

Save the Children
Terre des hommes

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VILI

## Special Publication for International Children Day - 2011

*Presided by*

**Mr.K.Thanapalasundaram**

*Edited by*

**Mr.K.M.Puvitharan**

*Published by*

**Divisional Child Monitoring Committee**

Divisional Secretariat

Manmunai Pattu.

*Funded by*

Save the Children

Terre des hommes



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழி - 04

## சர்வதேச சிறுவர் தின சிறப்பு மலர்

### மலர்க்குழுத் தலைவர்

**திரு.கோ.தனபாலசுந்தரம்**
பிரதேச செயலாளர்

### இதழாசிரியர்

**திரு.K.M.புவிதரன்**
சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்

### மதியுரைஞர் குழு

**திரு.P.குணரெட்ணம்**
உதவி திட்டமிடல் பணிப்பாளர்

**திரு.க.பிறேமகுமார்**
உதவிப் பிரதேச செயலாளர் (நிதி)

**திரு.S.துரையப்பா**
நிருவாக உத்தியோகத்தர்

**திரு.K.குருநாதப்பிள்ளை**
நிருவாக உத்தியோகத்தர் (கிராம சேவை)

### மலர்க்குழு

**திரு.S.இராசலிங்கம்**
தலைமையக முகாமையாளர் (சமுர்த்தி)

**திரு.T.அம்பிகாபதி**
சமூகசேவை உத்தியோகத்தர்

**திருமதி.A.C.சுமையா**
முகாமைத்துவ உதவியாளர்

**திரு.K.ரவிச்சந்திரன்**
நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் -நன்டத்தை.

**திரு.T.நாகேந்திரன்**
சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்

**செல்வி.த.மதியாபரணம்**
பதவிநிலை உதவியாளர்
(சமூக சேவை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே நுழையுமுன்...

**வாழ்த்துச் செய்திகள்**


- பிரதேச செயலாளர் (iv)
- அரசாங்க அதிபர் (v)
- ஆணையாளர் – நன்னடத்தை சிறுவர் பராமரிப்புச் சேவைகள் (vi)
- இதழாசிரியரிடமிருந்து.... (vii)


**ஆக்கங்கள்**


- எங்களை அன்பால் அணுகுங்கள் 01
- சிறுவர் உரிமைகள் (கவிதை) 03
- முக்கிய தொலைபேசி இலக்கங்கள் 03
- மூன்று கொய்யாக் கனிகள் (சிறுகதை) 04
- கோபத்தைக் கட்டுப்படுத்த... 05
- புதிய யுகம் செய்வோம் (கவிதை) 06
- எம்மைக் கொடுமைப்படுத்தாதீர்கள் (குட்டிக்கதை) 07
- பல்சுவைச் செய்திகள் 08
- சிறுவர் பராமரிப்பில் பங்களிப்போர் 09
- அறிந்துகொள்வோம் 11
- எம் மீதான முதலீடு நாட்டின் அபிவிருத்தியல்லவா? 12
- எம் பெற்றோர்களே எமக்கு முன்னுதாரணமாகுங்கள்.. 14
- அனைவரும் ஒன்றிணைவோம் 16
- மட்/போதனா வைத்தியசாலையின் சிறுவர்கள் சேவைகள்... 18
- சிறுவர் தினத்தில் உதித்த சிந்தனைகள் சில... 19
- நல்ல நண்பன் (சிறுகதை) 20
- வெற்றியீட்டிய சித்திரங்கள் 21
- பாடம் புகட்டிய துறவி (ஒருபக்கச் சிறுகதை) 22
- சிறு கவிதைகள் 23
- சமுதாயத்தை இருளுக்குள் தள்ளும் தொலைக்காட்சி நெடுந்தொடர்கள் 24
- ஆசைகள் (கவிதை) 25
- முரண்பாட்டு முகாமைத்துவம் 26
- இலங்கையின் சிறப்புக்களும் அமைவிடங்களும் 27
- ஒரு விடை தரும் இரு வினாக்கள் 28
- நாடுகளின் / இடங்களின் சிறப்புப் பெயர்கள் 28
- பரீட்சைக்குத் தயாராகுதல் 29
- எங்களைப் பறக்கவிடுங்கள் (கவிதை) 31
- புகைத்தல் (கவிதை) 31
- ஆசான்கள் (கவிதை) 31
- கடவுள் எங்கே இருக்கிறார்? (சிறுகதை) 32
- குறுக்கெழுத்துப்போட்டி 33




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி

எமது பிரதேச சிறுவர் கண்காணிப்புக் குழுவினால் 4வது தடவையாகவும் சிறுவர்களது ஆக்கங்கள் அடங்கிய "விழி" மலர் பிரசுரமாகுவதனை நினைந்து மனமகிழ்வடைகின்றேன்.

பிரதேச சிறுவர் கண்காணிப்புக்குழுவின் அயராத பங்களிப்புடன் இவ் ஆண்டின் முற்பகுதியில் எமது பகுதியில் நிலவிய வெள்ள அனர்த்த அசாதாரண சூழலினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் அக்குடும்பங்களில் பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வாழ்ந்துவந்த சிறுவர்களுக்கு ஆரோக்கியமான குடும்ப சமூக மற்றும் பாடசாலை சூழலை இயன்றவரை இதுவரை காலமும் பெற்றுக்கொடுத்துள்ளமையினை நினைத்து ஆத்மதிருப்தியடைவதுடன் அதற்காக அயராது உழைத்த இக்குழு உறுப்பினர்களான கல்வித் திணைக்கள, சுகாதாரத் திணைக்கள, பொலிஸ் திணைக்கள, தொழில் திணைக்கள மற்றும் எமது செயலக உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற நிறுவன, உள்ளூர் அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கு நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவிக்க இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்கின்றேன்.

எமது செயலக பாதுகாப்பு பிரிவினால் சமுதாயத்தில் பல்வேறு தளங்களிலும், பாடசாலை மட்டங்களிலும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான பல்வேறு அறிவூட்டல் வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தியதன் விளைவாகவும், கிராமசேவகர் பிரிவுகள் தோறும் கிராமிய சிறுவர் கண்காணிப்புக் குழுக்களைப் பலப்படுத்தும் நோக்குடன் குழு அங்கத்தவர்களுக்கு அறிவூட்டல் வேலைத்திட்டம் மற்றும் அவர்களது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக நியமனக்கடிதங்கள் வழங்கி அவர்களைச் சுயாதீனமாக இயங்க சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுத்ததன் விளைவாகவும் பல்வேறு சிறுவர்களுக்கெதிராக நடைபெறும் சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகள் எமக்கு கிடைத்துவருகின்றமையினை சுட்டிக்காட்டுவதுடன், இதற்காக கிராமிய சிறுவர் கண்காணிப்புக்குழு உறுப்பினர்களது சேவை நலனைப் பெரிதும் மதிக்கிறேன். மற்றும் சமூக பராமரிப்பு நிலைய உத்தியோகத்தர்களினதும், சமூர்த்தி சமூக அபிவிருத்தி பிரிவினரதும் Save the children, Unicef, TDH, ASB, RDF நிறுவனங்களின் அனுசரணையிலும் சிறுவர் இடைவிலகலை குறைத்தல், குடும்ப வாழ்வாதாரத்தைப் பலப்படுத்தல், உளநல ஆற்றுப்படுத்தல் வேலைத்திட்டத்தை அமுல்படுத்தல், குடும்ப வன்முறையினைக் குறைத்தல் முதலானவற்றிற்காக மாதாந்த விடய மாநாடு (Case Conference) நடாத்தப்பட்டு இயன்றவரை சிறுவர் பாதுகாப்பினை உறுதி செய்தமையினை எண்ணி மனமகிழ்வடைகிறேன்.

பல்வேறு வேலைத் திட்டங்களை நிறைவு செய்த மனநிறைவுடன் "விழி" சிறுவர் மலர் வெளியீட்டை அடிப்படையாகக் கொண்டு எமது இறுதி சிறுவர் தின நிகழ்வினை நடாத்துவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி கொள்கின்றேன். பாடசாலை மற்றும் சிறுவர் கழகங்களை அடிப்படையாகக் கொண்டு நடாத்தப்படும் கட்டுரை, கவிதை, நாடகப் போட்டிகளை அரங்கேற்றுவதற்கும், அவர்களின் திறமைகளை வெளிக்கொணர்வதற்கும் இச்சிறுவர் தின நிகழ்வு வழிகோலும் என நம்புகிறேன். "விழி" சிறப்பு சிறுவர் சஞ்சிகையானது வழமைபோலவே இவ்வாண்டும் அவர்களது ஆக்கங்களை மட்டும் சுமந்துவருவது விசேட அம்சமாகும். அவர்கள் தங்களது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான உரிமையினை "விழி" பெற்றுக் கொடுத்துள்ளதனை எவரும் மறுப்பதற்கில்லை. மட்டுமன்றி இவ் "விழி" சஞ்சிகையானது சிறுவர் உரிமை, சிறுவர்களின் தேவைகள், அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான அறிவூட்டத் தினை எமது சமூகத்திற்கு வழங்குமென நம்புகின்றேன்.

இவ்வேளையில் ஆக்கங்கள், நிழ்ச்சிகளைத் தந்துதவிய சிறுவர்களுக்கும், அவர்களைப் பாடசாலை மட்டத்திலே வழிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களுக்கும், "விழி" உருவாக்கத்திற்கு கூட்டாக நிதியுதவியினை வழங்கிய Save the children, TDH நிறுவனத்தாருக்கும் விழா ஏற்பாட்டுக்கு உதவிய Koinoniya, Sweedef, Desmio, அரச, அரசசார்பற்ற அமைப்புக்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன், சிறுவர் மேம்பாட்டிற்காக உழைக்கும் எனது பிரதேச சிறுவர் கண்காணிப்புக் குழு சார்ந்த அனைவருக்கும் எனது பாராட்டுக்கள் உரித்தாகட்டும்.

**திரு.K.தனபாலசுந்தரம்,**
பிரதேச செயலாளரும்,
பிரதேச சிறுவர் கண்காணிப்புக்குழுத் தலைவரும், மண்முனைப்பற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரசாங்க அதிபரின் வாழ்துச் செய்தி

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு மண்முனைப்பற்று ஆரையம்பதி பிரதேச செயலகத்தினால் வெளியிடப்பட்டுவரும் "விழி" எனும் சிறுவர் மலருக்கு வாழ்த்துச்செய்தியை வழங்குவதையிட்டு உளம் கனிகின்றேன்.

சிறுவர் பாதுகாப்பு மற்றும் அவர்களின் மேம்பாடு என்ற விடயங்களை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்வதற்கு "வெளியீடுகள்" முக்கிய இடம் வகிக்கின்றன. இந்த அடிப்படையில் இப்பிரதேச சிறுவர்கள் தமது உரிமை, பாதுகாப்பு என்ற விடயங்ளின் புரிதல்களாக உருவாகியுள்ள படைப்புக்களை மட்டும் தாங்கி வெளிவந்துகொண்டிருக்கும் இம்மலர் சிறுவர்களின் பங்கு பற்றுதலுக்குக் களமாக அமைவதுடன் அவர்களின் புதுமை செய்தல், மாற்றீடு களைக் கண்டறிதல், சிக்கல்களை விடுவித்தல், முடிவெடுத்தல் என்ற அறி வார்ந்த சிந்தனைப் போக்குக்கும் பாதை அமைப்பதையிட்டு மகிழ்வடை கின்றேன்.

சிறுவர்கள் சார் விடயங்களை ஒரு பொதுவான தளத்திற்குக் கொண்டுவரு கின்ற 'விழி' எனும் மலர் சிறுவர்கள் மேல் கொண்டிருக்கும் கலாவதியாகிய பிற்போக்குச் சிந்தனைகளை உடைத்தெறியும் 'உளி' ஆக அமையும் என்பது எனது நம்பிக்கை.

எனவே, இம் முயற்சியினை முன்னெடுத்துவரும் மண்முனைப்பற்று, பிரதேச செயலாளர் அவர்களுக்கும் மற்றும் செயலக ஊழியர்களுக்கும், விழாக் குழுவினருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களையும், நல்வாழ்த்துக் களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.சுந்தரம் அருமைநாயகம்,**
அரசாங்க அதிபரும், மாவட்டச் செயலாளரும்,
கச்சேரி,
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு திணைக்கள தேசிய ஆணையாளரின் வாழ்த்துச் செய்தி

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு மண்முனைப்பற்று பிரதேச செயலக குழாமினர் தொடர்ச்சியாக 4ஆவது தடவையாக வெளியிடப்படும் "விழி" சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

"நாட்டைக் காப்பது போன்றும், உங்களினதும், எங்களினதும் சிறுவர்களை நாம் பாதுகாப்போம்" என்ற கருப்பொருளிலே இவ்வாண்டு சிறுவர் தினம் கொண்டாடப் படுகின்றது. தேசிய வைபவம் அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் அலரி மாளிகையில் கொண்டாடப்பட்டது.

சமீபத்திய சமூகப் பொருளாதார மாற்றங்கள். குடும்பக் கட்டமைப் பில் பல்வேறு நெருக்கடிகளையும். மாற்றங்களையும் உருவாக்கியுள்ளது. மனித உறவாடல்களில் நேர்மையீனத்தையும், எதிர்மறையான சிந்தனையையும் நடத்தைப் பண்புகளாக்கியுள்ளன. ஆணும் பெண்ணும் பொருளீட்டலில் அதிகம் நாட்டம் கொண்டவர்களாகத் தீவிரமாக உழைக்க வேண்டியவர்களாகவும் மாறி வருகின்றார்கள். விரிவுபெறும் நுகர்வுப் பண்பாடு இதுவரை காலமும் நாம் கட்டிக் காத்த சமூக மதிப்பீடுகளில் விழுமியங்ளில் பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்தி வருகின்றன. இதனால் குடும்ப மனித உறவுகளில் மேலும் சிக்கல்களும் விலகல்களும் தனிமைப்பாடும் ஏற்படுகின்றன.

இவ்வாறான சூழலில் சிறார்களைப் பாதுகாத்து அவர்களுக்கு சமூகத்தில் சிறந்த வாய்ப்பைப் பெற்றுக்கொடுத்து எதிர்காலத்தில் சிறந்த ஆளுமையுள்ளவர்களைத் தோற்று விக்கும் பணியில் மண்முனைப்பற்று பிரதேச செயலாளரும் எமது திணைக்கள சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் உட்பட அவரது பணிக்குழாமினரின் பணிகளை பெரிதும் மதிப்பதுடன் இதற்காக ஒன்றிணைந்து செயற்படும் பிரதேச சிறுவர் கண்காணிப் புக் குழு உறுப்பினர்களது சேவையினையும் பாராட்டுகின்றேன்.

**திரு.D.M.S.அபயகுணவர்த்தன**
தேசிய ஆணையாளர்,
நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம்,
நுகேகொட.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதழாசிரியரிடமிருந்து....

இவ்வுலகில் பிறந்துள்ள எல்லா சிறுவர்களும் கௌரவம் மற்றும் உரிமைகளைக் கொண்டுள்ளவர்களாகவும், சுதந்திரமானவர்களாகவுமே பிறக்கின்றனர். குழந்தைப் பருவத்தைச் சுதந்திரமாகக் கழிக்கும் சிறுவர்களுக்கு சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் கலாசார சூழ்நிலைகளுக்குக் கட்டுப்பட்டு வாழ நேரிடுகின்றது. இந்த காரணிகளின் சமநிலை சீர்கெடும் போது சிறுவர்கள் கடினமானதும், கசப்பானதுமான அனுபவங்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்படுகின்றது. இவ்வாறான நிலைமையில் சிறுவர்களின் குழந்தைப் பருவத்தைப் பாது காப்பது, சமூகத்தினதும், அரசினதும் கடமையாகும். நவீன உலகில் துரதிஷ்டவசமாக சிறுவர்கள் வளர்ந்தோரினாலும், சமூகத்தினாலும் பல்வேறு வழிகளில் துன்புறுத்தப்படுவதன் காரணமாக இன்றைய சமூகத்தில் சிறுவர்கள் கசப்பான அனுபவங்களைப் பெறும் நிலை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது.

இந்தப் பின்னணியில் இவர்களை பாதுகாக்க வேண்டிய தேவை நம் எல்லோர் மீதும் சுமத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் சிறுவர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதென்பது தனிமனிதனாலோ, குழுவாலோ மேற்கொள்ள முடியாது. பல்வேறு துறைசார்ந்ததாக அமையவேண்டும். *(Multy Sectoral Approach)* எனக் கூறப்படுகின்றது. சிறுவர்களோடு கடமைபுரியும், சம்பந்தப்பட்ட அனைவரும் இவர்களது பாதுகாப்பு மீது கவனமெடுக்க வேண்டும்.

நாளாந்த வாழ்வில் பெரியவர்கள் - சிறுவர்களது பிரச்சினைகளை வரையறுப்பதை விட சிறுவர்கள் தாங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் சவால்களையும் அவர்களாகவே வெளிப்படுத்த வேண்டிய அவசியம் இன்று எல்லோராலும் உணரப்பட்டு வருகின்றது. அத்தோடு சிறுவர்களின் திறமைகளையும் ஆற்றல்களையும், ஆளுமைகளையும் தலைமைத்துவத்தையும் விருத்தி செய்வதனை நோக்காகக் கொண்டும், சர்வதேச சிறுவர் சமவாயத்தில் சிறுவர்கள் தங்களது கருத்துக்களை வெளியிடுவதற்கு உள்ள உரிமையினை அடியொற்றியும், குடும்ப, சமூகத் தளங்களிலும் சிறுவர் பாதுகாப்பு அறிவூட்டலை மேலும் விரிவடையச் செய்வதற்காகவும் இப்பிரதேச சிறுவர்களது படைப்புக்களை ஆவணப்படுத்தும் நோக்கத்துடனும், படைப்புக்களை வழங்கிய ஒவ்வொரு சிறுவர்களும் தங்களது சாதனை ளைப் பார்த்து மகிழ்வதுடன் மீண்டும் சிறந்த படைப்புக்களை உருவாக்க முயற்சிக்கக்கூடிய நிலையினை ஏற்படுத்தும் நல்லெண்ணத்துடனும், எதிர்கால சமுதாயத்திற்கு சிறந்த எழுத்தாளர்களை இனம்காட்டும் வகையிலும் பலரது பாராட்டுக்களுடனும் 4வது தடவையாகவும் இம்மலரைப் பிரசவிப்பதற்கு பிரதேச சிறுவர் கண்காணிப்புக்குழு தீர்மானித்திருந்தது.

இம்மலரை வெளியிடுவதற்கு பல்வேறு வழிகளில் ஆலோசனையும், அனுமதியும் வழங்கிய பிரதேச செயலாளர் திரு.K.தனபாலசுந்தரம் அவர்களுக்கும், இம்மலர் அச்சுப்பதிப்பு வேளையில் அறிவுரை வழங்கிய கணக்காளர் திரு.K.பிறேம்குமார் அவர்களுக்கும், இம்மலரை முழுமையாக வெளியிட கூட்டாக நிதியுதவி வழங்கிய Save the Children, TDH நிறுவனத்தாருக்கும், பக்கபலமாக நின்று உதவிய சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு.T.நாகேந்திரன், சமூகசேவை உத்தியோகத்தர் திரு.T.அம்பிகாபதி, சிறுவர் நன்னடத்தை நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் திரு.K.ரவிச்சந்திரன் அவர்களுக்கும், சமூக சேவைப் பிரிவினர், மலர்க்குழு உறுப்பினர்கள் மற்றும் ஏனைய எமது பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், வாழ்த்துச் செய்திகள் வழங்கியோர்கள், ஆக்கங்கள், கலைநிகழ்வுகள் வழங்கிய சிறுவர்கள், அதற்குதவிய பாடசாலை ஆசிரியர்கள், அதிபர்களுக்கும் இவ்விழா சிறப்புற நிதியுதவி, பொருளுதவி வழங்கிய Desmio, Koinoniya , Sweedef, சமூர்த்தி சமூக அபிவிருத்திப் பிரிவு, நன்னடத்தை சிறுவர் பராமரிப்புத் திணைக் களம் மற்றும் பல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய பிரதேச சிறுவர் கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள் ஏனைய நல்ல உள்ளங்களிற்கும், நன்றிகளைத் தெரிவிப்பதோடு, இம்மலரை அழகுற அச்சிட்டுத்தந்த சண் அச்சக உரிமையாளருக்கும், ஊழியர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.K.M.புவிதரன்**
சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், மண்முனைப்பற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களை அன்பால் அணுகுங்கள்



"டிவி பார்க்காதேன்னு சொல்லி முடிக்கிறதுக்குள்ள மூனு சேனல் மாத்திடறான். ஃபிரிட்ஜை திறாக்காதேடான்னா அதைத்தான் செய்வேன்னு அடம்பிடிக்கிறான்... தண்ணியிலே விளையாடாதே, சளிபிடிக்கும்னு கரடியாக் கத்துனாலும் காதே கேட்காத மாதிரி தண்ணியில விளையாடுறா என் பொண்ணு... எதை செய்யாதேன்னு சொன்னாலும் அதைத்தான் செய்வேன்னு அடம்பிடிக்கிறா...

பெரியவங்க பேசும்போது வாயைப் பாரத்துக்கிட்டு நிக்காதேன்னு எத்தனையோ முறை சொல்லியாச்சு... திருந்தறதாவே இல்லை... இவங்களை எப்படி வழிக்குக் கொண்டுவர்றதுன்னே தெரியலை" பெரும்பாலான பெற்றோரின் புலம்பல் இதுதான்.

இந்தப் புலம்பல்களுக்குத் தீர்வு என்ன?

"முதலில் இப்படிப் புலம்புவதை பெற்றோர் நிறுத்த வேண்டும். ஒரு பொருளை மூடி வைத்திருந்தால் உள்ளே என்ன இருக்கிறது என்று பார்க்கும் ஆர்வம் எழுவது எப்படி இயல்பானதோ, அதேபோல தான் நீங்கள் "செய்யாதே" என்று சொல்வதை செய்து பார்க்க நினைப்பதும், குழந்தைகளுக்கு மட்டுமல்ல, பெரியவர்களுக்கும் இதே மனநிலை இருக்கும். நீங்கள் "செய்யாதே" என்று சொல்லியும் உங்கள் குழந்தை அதைச் செய்கிறது என்றால், நீங்கள் சொல்லும் முறையில் மாற்றத்தைக் கொண்டு வரவேண்டும். "அதைச் செய்யாதே... இதைத் தொடாதே" என்று வீடே அதிரும்படி கத்தக்கூடாது. "சொல்வதை மீறி இதைச் செய்தால் என்ன செய்வேன் தெரியுமா?" என்று மிரட்டவும் கூடாது. குழந்தைகளை எப்போதும் இதுபோல நெகட்டிவாக அணுகுவதைத் தவிர்ப்பது நல்லது. இப்படிப் பேசினால் அவர்கள் எரிச்சலடைவார்கள். அதற்காகவே உங்கள் வார்த்தையை மீறி நீங்கள் வேண்டாம் என்று சொன்னதைச் செய்துகாட்ட நினைப்பார்கள்.

உங்கள் அதிரடி அணுகுமுறையைக் கொஞ்சம் மாற்றி. இதமாக எடுத்துச் சொல்லிப் பாருங்களேன். வேண்டாத, உடலுக்குத் தீங்கு தரக்கூடிய செயல்களை குழந்தை செய்தால் ஆத்திரப்படாமல், வார்த்தைகளில் குழைவைக் கூட்டி, "அதையெல்லாம் செய்யக்கூடாது கண்ணா..." என்று சொன்னால் அதற்குக் கிடைக்கும் ரிசல்ட்டே தனிதான். அதையும் மீறி குழந்தை செய்தால், "நீ இப்படிச் செய்தால் இப்படி ஏற்படலாம்" என்று அந்தச் செயலால் ஏற்படும் பின்விளைவுகள் பற்றி எடுத்துச்சொல்ல வேண்டும். தேவைப்பட்டால் உங்கள் கற்பனையைச் சேர்த்து அவர்களை மிதமாகப் பயமுறுத்தலாம். இப்படிச் சொல்லும்போது நீங்கள் அந்த இடத்தில் இருந்தாலும் இல்லையென்றாலும் அடுத்த முறை அந்தச் செயலை செய்ய குழந்தை யோசிக்கும். இதுதான் உங்கள் வெற்றி.

பலமுறை எடுத்துச் சொல்லியும் மசியாத குழந்தைகளை என்ன செய்வது? வேறு வழியே இல்லை. அவர்கள் வழிக்கு நீங்கள் செல்லவேண்டியதுதான். தேவையற்ற செயல்களில் குழந்தைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபடும்போது, அவர்களுக்கு ஆர்வமான விளையாட்டுக்களைப் பற்றி பேசி அவர்களது கவனத்தை திசை திருப்பலாம். உதாரணமாக, படிக்கிற நேரத்தில் விளையாடக்கூடாது என்று கண்டிப்புக் காட்டாமல், படித்து முடித்துவிட்டால் அடுத்து என்ன புது விளையாட்டு விளையாடலாம் என்று குழந்தையிடம் ஆலோசனை செய்தால், குழந்தை உற்சாகமாகி படிக்கத்தொடங்கிவிடும். தவிர, எப்போதும் படிப்பைப் பற்றி மட்டுமே அவர்களிடம் பேசிக்கொண்டிருந்தால், படிப்பின் மீதே வெறுப்பு வந்துவிடும். இதைவிட, படிப்பதால் கிடைக்கும் பலன்களையும் அதனால் அவர்களுக்குக் கிடைக்கவிருக்கும் பெருமையையும் எடுத்துச் சொல்லலாம். "நீ நல்லா படிச்சாதான் புதுப்புது விளையாட்டுக் களைப் புரிந்துகொள்ள முடியும். அதற்கும் அறிவு வேண்டும் இல்லையா?" என்று சொன்னால் எந்தக் குழந்தைதான் படிப்பை வெறுக்கும்.

குழந்தைகள் எப்போதும் பெற்றோரின் மன நிலைக்கு வரமாட்டார்கள். பெற்றோர்தான் குழந்தைகளின் மன நிலைக்கு இறங்கிப்போக வேண்டும். அவர்களை, அவர்கள் போக்கில் விட்டுத்தான் நம் வழிக்குக் கொண்டுவரவேண்டும். அப்பா, அம்மா சொல்வது நம் நல்லதுக்குத்தான் என்ற நம்பிக்கையை குழந்தைகளுக்கு ஏற்படுத்த வேண்டும்.

அதற்கு குழந்தைகள் உலகத்துக்குள் நாம் செல்ல வேண்டும். அவர்கள் சொல்வதைக் காதுகொடுத்துக் கேட்க வேண்டும். அவர்களுக்குப் பிடித்த விஷயங்கள் குறித்துப் பேச வேண்டும். ஒரே வரியில் சொல்வதென்றால், அவர்களை நண்பர்களாக அணுக வேண்டும்".

பிள்ளைகளை அடிக்கக்கூடாது. அடித்தால் சொல்பேச்சு கேட்கமாட்டார்கள். சுவிட்சில கையை வைக்காதேன்னு சொல்லக்கூடாது. கையை வைத்தால் என்ன நடக்கும்னு எடுத்துச் சொல்லவேண்டும். எப்பவுமே அடிக்காமல் எப்பவாவது லேசா குரலை உயர்த்தினாலே, அவர்கள் செய்வது தப்பு என்று அவர்களுக்குப் புரிந்துவிடும். அவர்கள் குழந்தைகளாக இருந்தாலும் வாழ்க்கையில் இருக்கிற நெளிவு சுளிவுகள் பற்றி எடுத்துச் சொல்லுங்கள். அப்பா, அம்மா எப்படிக் கஷ்டப்பட்டு முன்னுக்கு வந்தோம் என்பதை அடிக்கடி சொல்வதுடன், குடும்ப கஷ்ட நஷ்டங்களையும் புரிய வையுங்கள். அதனால் பெற்றோர் மீது அவர்களுக்கு மரியாதை அதிகம் ஏற்படும்.

எதையுமே அன்பால் அணுகுங்கள். தப்பு செய்தால் அது அவர்களுக்கும் நல்லது இல்லை, எங்களுக்கும் நல்லது இல்லைன்னு பொறுமையாகச் சொல்லுங்கள். பிறகு பாருங்கள் உங்கள் பிள்ளைகள் எவ்வளவு சமத்து பிள்ளைகள் என்று.

த.தேவராசா
மட்/புதுக்குடியிருப்பு கண்ணகி
மகா வித்தியாலயம்.
'மலரும் மொட்டு சிறுவர் கழகம்.'

**Family** : *People who know you the best and Love you anyway.*

*Providing love and affection is an important family function.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் உரிமைகள்

புறப்படுவோம் நாம் புறப்படுவோம்.
சிறுவர் உரிமையை மீட்டெடுக்க புறப்படுவோம்
பறந்த உலகின பட்டாம் பூச்சிகள் எம் சிறார்கள்
அவர்களின் இறக்கையை முடக்குவோரை அறிவுறுத்த
இன்றே புறப்படுவோம்..



நாளைய நாட்டின் முதுகெலும்புகளை
முழுமையாக பாதுகாக்க
முத்தமிழால் முழங்கி
முரண்பாடுகளைத் தீர்க்க
இன்றே புறப்படுவோம்..



சுய தொழில்களில் சிறார்களை அமர்த்தி
சொகுசாக உண்ணும் முரடர்களை விரட்டி
கல்விகற்கத் துடிக்கும் பிஞ்சு உள்ளங்களை
கரை சேர்க்க கருணைப் படகுகளாய்
இன்றே புறப்படுவோம்..



புகை பிடித்தலாலும், மதுபோதையாலும்
சீரழியும் எமது சமூகத்தை
இன்றே சீரடுத்த எம் சிறார்களுக்கு
நல்லதைப் போதிக்க
இன்றே புறப்படுவோம்..



சிறார்களை வேலையில் அமர்த்தி
சிறு சுகம் காண்பவரது
அவர்களை நன்கு கற்க வைத்து
உயர்வான வேலையில் அமர்த்தி
நிறைவான சுகம் காண
இன்றே புறப்படுவோம்..



எதிர்காலத்தை இன்றே திட்டமிட்டு
எம் நாளைய புத்திஜீவிகளுக்கு
நன்னடத்தையையும், ஒழுக்கத்தையும்
போதிக்க பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரை
செல்ல வைத்து
உலகத்திற்கு பயன் உடையவர்களாக்க
இன்றே புறப்படுவோம்.. வாரீர்.


**M.H.F.ஹஸ்னா** – தரம் - 10,
மட்/ஒல்லிக்குளம், அல்ஹம்றா வித்தியாலயம்.
'மர்வா சிறுவர் கழகம்'


# முக்கிய தொலைபேசி இலக்கங்கள்

- அவசர சிறுவர் பாதுகாப்பு இல. - 1929
- பிரதேச செயலகம் - மண்முனைப்பற்று - 065 2245212
- சமூக பராமரிப்பு மையம் - தாழங்குடா. - 065 2246595
- வலயக்கல்வி அலுவலகம், மட்டக்களப்பு. - 065 2224468
- வலயக்கல்வி அலுவலகம், மட்டக்களப்பு மத்தி. - 065 2241043
- நன்னடத்தை மாவட்ட அலுவலகம் மட்டக்களப்பு - 065 2222142
- போதனா வைத்தியசாலை மட்டக்களப்பு - 065 2222261, 065 2222262
- மாவட்ட வைத்தியசாலை- ஆரையம்பதி. - 065 2245791
- பிரதேச சுகாதார வைத்தியர் பணிமனை ஆரையம்பதி - 065 2248335
- மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழு - 065 2224242, 065 2226442
- பொலிஸ் நிலையம் - காத்தான்குடி. - 065 5675001
- உதவி தொழில் ஆணையாளர் அலுவலகம் - மட்டக்களப்பு - 065 2222151
- ஜீவானந்த சிறுவர் இல்லம் - புதுக்குடியிருப்பு - 065 3650438
- மட்/ஆரையம்பதி இராமகிருஸ்ணர் மகா வித்தியாலயம் - 065 3641383
- மட்/ஆரையம்பதி நொத்தாரிசி வித்தி. - 065 3647168
- மட்/ஆரையம்பதி மகா வித்தி. - 065 2246561
- மட்/கோவில்குளம் விநாயகர் வித்தி. - 065 3647169
- மட்/மாவிலங்கன்துறை விக்னேஸ்வரா வித்தியாலயம் - 065 3647170
- மட்/அல்.அக்ஷா மகா வித்தி. - காங்கேயனோடை - 065 4901289
- மட்/அல்.ஹம்றா வித்தி. ஒல்லிக்குளம் - 065 3647191
- மட்/அலிகார் ம.வித்தி. பாலமுனை - 065 3646561
- மட்/தாழங்குடா விநாயகர் வித்தி. - 065 3647172
- மட்/தாழங்குடா RCTMS - 065 3647171
- மட்/புதுக்குடியிருப்பு கண்ணகி ம.வித்தி. - 065 3645414
- மட்/கிரான்குளம் விநாயகர் வித்தி. - 065 3647174




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதை



# மூன்று கொய்யாக் கனிகள்

காந்தன் ஒரு சிறுவன். அவன் சிறுவயதில் தந்தையை இழந்தவன். அவனது அம்மா அவனை ஒழுக்க மாக வளர்த்து வந்தாள். அவனுக்கு நண்பர்கள் இல்லாததால் அவனது அம்மா ஒரு நல்ல நண்பனுடன் சிநேகத்தை ஏற்படுத்திக்கொள் என்று சொன்னாள்.

அம்மா அதற்காக ஒருநாள் அவனிடம் நண்பன் ஒருவரை நீ வீட்டிற்குக் கூட்டி வருமாறு சொன்னாள். அவனும் கூட்டி வந்து 3 கொய்யாக் கனிகளைக் காந்தனிடம் கொடுத்து ராஜூவுக்கு கொடுக்கச் சொன்னாள். அவன் 3 கனிகளையும் சாப்பிட்டு விட்டான். அம்மா சொன்னாள் "அவனோடு நீ சேராதே. அவன் சுயநலமுள்ளவன்" என்றாள்.

மேலதிக வகுப்பு நண்பனில் ஒருவனான சரவனனை வீட்டிற்குக் கூட்டிக்கொண்டு வந்தான். அவனிடம் 3 கொய்யாக் கனிகளைக் கொடுத்து உண்ணச் சொல்ல, 2 கனியை எடுத்துவிட்டு காந்தனுக்கு ஒரு பழத்தைக் கொடுத்தான். அம்மா அதற்கு "அவன்கூட சுயநலமுள்ளவனாக உள்ளான்" என்றாள்.

அதுவும் சரி என்று மூர்த்தி என்பவனைக் கூட்டி வந்து 3 கனிகளைக் கொடுக்க அவன் 3 கனிகளையும் காந்தனிடம் கொடுத்துவிட்டான். அம்மா அதற்கு "அவன் உன்னிடம் புகழ்பெற இதைச் செய்துள்ளான். எனவே நீ அவனுடன் சேராதே" என்றாள்.

அதுவும் சரி என்று சிவாவை அழைத்து அவனிடம் 3 கனிகளைக் கொடுக்க அவன் காந்தனுக்கொன்று தனக் கொன்று எடுத்துவிட்டு மற்றயதை சரிபாதியாக வெட்டி இருவரும் எடுத்தனர். இதைப் பார்த்த அம்மா "அவனே நடுநிலையான நண்பன். அவன் உனது துன்பத்திலும் இன்பத்திலும் பங்கெடுப்பான்" என்றாள். அவனும் சிவாவுடன் பழக்கம் கொள்ளத் தொடங்கினான்.

**அஸாம் அகமட் – தரம் - 5,**
**மட்/காங்கேயனோடை இக்றா வித்தியாலயம்.**
**'அல்-அமீன் சிறுவர் கழகம்'**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோபத்தைக் கட்டுப்படுத்த....

**கோ**பத்தைக் கட்டுப்படுத்த பல்வேறு வழிகளைப் பலரும் பரிந்துரை செய்கின்றனர். வல்லுநர்களின் ஒருமித்த பார்வையின் அடிப்படையில் கிடைக்கும் சில பரிந்துரைகள் இவை....

1. யதார்த்ததைப் புரிந்துகொள்ளப் பழகுங்கள். எல்லாமே நம்முடைய விருப்பப்படியும், திட்டத்தின்படியும் நடக்கப் போவதில்லை. வாழ்க்கையின் இந்த உண்மை நிலையைப் புரிந்துகொள்வது தேவையற்ற கோபங்கள் எழுவதைத் தவிர்க்கும்.

2. கோபத்தை அன்பினால் நிரப்பப் பழகுங்கள். "இன்னார் செய்தாரை ஒறுத்தலும், நன்னயம் செய்தலும்" உறவுகளுக்கிடையே நீண்டகால பந்தத்தை உருவாக்கும். அடுத்தவர்கள் என்ன செய்யவில்லை எனும் பார்வையிலிருந்து, நான் என்ன செய்தேன் எனப் பார்வையை மாற்றுவதே இதன் அடிப்படை.

3. கோபத்தை மூட்டை கட்டிக்கொண்டு திரியாதீர்கள். கோபம் உடனுக்குடன் கரைவதே நல்லது. அப்படியே நீடித்தாலும் ஒருநாளின் கோபம் அடுத்தநாள் வரை போகவே கூடாது என்பதில் உறுதியாய் இருங்கள். இந்த நாள் புத்தம் புதுசு என்றே ஒவ்வொரு நாளையும் எதிர்கொள்ளுங்கள்.

4. கோபம் வந்தவுடன் அதை உணர்ந்துகொள்ளுங்கள். மூச்சுப் பயிற்சி, பார்வையை வேறு இடத்துக்கு மாற்றுவது, மகிழ்ச்சியான ஒரு பகல் கனவில் மூழ்குவது, நூறிலிருந்து ஒன்றுவரை தலைகீழாய் எண்ணுவது என உங்கள் கவனத்தை மாற்றுங்கள். கோபம் தற்காலிகமாய் தள்ளி நிற்கும்.

5. பொசிடிவ் மனநிலையுள்ள மனிதர்களுடன் உங்களின் சகவாசத்தை வைத்துக்கொள்ளுங்கள். உங்களுடைய கோபம் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்துவிடும்.

6. நமக்குப் பிடிக்காதவர்களைப் பற்றிய சிந்தனைகளைக் கொஞ்சம் ஒதுக்கிவிட்டு, நமக்குப் பிடித்த நண்பர்கள், உறவினர்கள், அவர்கள் செய்த நல்ல விஷயங்கள் இவற்றைப் பற்றியும் அடிக்கடி அசை போடுங்கள்.

7. சிரிக்கப் பழகுங்கள். நகைச்சுவைத் திரைப்படங்கள், கார்ட்டூன் படங்கள் பாருங்கள். நகைச்சுவை நூல்களை வாசியுங்கள். மற்றவர்களோடு சிரித்து மகிழ்ந்து இருப்பவர்களுடைய உடலில் கோபத்தைக் கிளறும் வேதியியல் பொருட்கள் அதிகமாய் சுரக்காது என்பது மருத்துவ உண்மை.

8. இப்பொழுது கோபத்தைத் தாண்டிய இந்தச் செயல் சில ஆண்டுகள் கழித்தும் கோபம் கொள்ளச் செய்யுமா என யோசியுங்கள். டிராபிக்கில் கத்துவதும், வரிசையில் ஒருவர் புகுந்தால் எரிச்சலடைவதும் தேவையற்றவை என்பது புரியும்.

9. இந்தச் செயல் உங்கள் மீது திட்டமிட்டே செய்யப்பட்டதா? அடுத்த நபரின் இடத்தில் நீங்கள் இருந்தால் என்ன செய்வீர்கள்? இதே தவறை நீங்கள் செய்தால் உங்கள் மீதே கோபம் கொள்வீர்களா என யோசியுங்கள். பெரும்பாலான கோபங்கள் காணாமல் போய்விடும்.

10. மனதார மன்னியுங்கள். இந்த ஒரே ஒரு பண்பு உங்களிடம் இருந்தால் கோபத்தை மிக எளிதாக வெல்லவும் முடியும். வெற்றியை ஆனந்தமாய் மெல்லவும் முடியும்.

**கோ.சகானா** (தரம் - 13),
மட்/புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தி. 'கதிரவன் சிறுவர் கழகம்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புதிய யுகம் செய்வோம்

எழுந்திடுவோம் சிறுவர்களே எழுந்திடுவோம்
இனியும் தாமதம் வேண்டாம்
நன்றாக நாம் இணைந்து
ஒன்றாக கரங்கள் சேர்த்து
செய்திடுவோம் புதிய யுகம்

சாதி, மதம் ஒழித்திடுவோம்
சமூகத்தை ஒன்று சேர்த்திடுவோம்
ஆயிரம் மதங்கள் சேர்ந்திடவே
ஆயுதம் ஒன்றும் தேவையில்லை
செய்திடுவோம் புதிய யுகம்

தடைகள் பல தாண்டிடுவோம்
தமிழகத்தை நாம் வென்றிடுவோம்
சத்தியத்தை நிலை நாட்டிடவே
சாதனைகள் பல புரிந்து
செய்திடுவோம் புதிய யுகம்

ஆணவம் அதனை அடக்கிடுவோம்
ஆன்மீகத்தை நன்கு வளர்த்திடுவோம்
பாங்குடன் நாம் வாழ்ந்திடவே
பட்டங்கள் பல பெற்று
படைத்திடுவோம் புதிய யுகம்

இன்னல்களை நாம் அகற்றிடுவோம்
இன்பங்களை எல்லாம் அள்ளிடுவோம்
உத்தரமாய் நாம் வாழ்ந்திடவே
உன்னதங்கள் பல புரிந்து
உருவாக்கிடுவோம் புதிய யுகம்

புன்னகையுடன் நாம் வாழ்ந்திடுவோம்
புதுமைகளை நாம் பேணிடுவோம்
புத்தியாக நாம் வாழ்ந்திடவே
புதுமைகள் பல படைத்து
புதிய யுகம் செய்திடுவோம்.




இ.ஷகானியா
தரம் - 10,
மட்/ஆரையம்பதி மகா வித்தியாலயம்.
'வள்ளுவர் சிறுவர் கழகம்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குட்டிக்கதை



# எம்மை கொடுமைப்படுத்தாதீர்கள்

பூஞ்சோலை என்பது ஓர் அழகிய கிராமம். அக்கிராமத்தில் பொன்னம்மா எனும் ஒரு பெண் வாழ்ந்து வந்தாள். அவளுக்கு நான்கு பெண் பிள்ளைகளும், ஒரு ஆண் பிள்ளையும் இருந்தனர். முதல் நான்கு பிள்ளைகளும் பெண் பிள்ளைகள். இறுதி பிள்ளையே கமல் எனும் ஆண்பிள்ளை. அவன் இரண்டுமாத கைப்பிள்ளையாக இருக்கும் போதே பொன்னம்மா தனது கணவன் கந்தையாவை காலன் எனும் கால வைரவனுக்கு பலிகொடுத்துவிட்டாள். கணவன் இறந்ததும் பொன்னம்மா ஒவ்வொரு வீடாக சென்று வேலை செய்து தனது பிள்ளைகளை வளர்த்து வந்தாள்.

இவ்வாறு அவர்களது காலம் விரைவாகக் கழிந்தது. மூத்த பிள்ளைக்கு பதினைந்து வயதாகவும் ஆகிற்று. இதற்கு மேல் பொன்னம்மாவிற்கு வேலை செய்ய முடியவில்லை. நோய்வாய்ப்பட்டாள். அதனால் எல்லாப் பிள்ளைகளும் தமது படிப்பை இடையிலேயே நிறுத்தவேண்டிய நிலை ஏற்பட்டது. இதை உணர்ந்த மூத்த மகளான மாலா தான் வேலைக்குச் செல்ல முடிவு செய்தாள். அயல் வீட்டாரின் உதவியுடன் மாலா தனது தாய் சகோதர்களை விட்டுப் பிரிந்து சென்று வேறு இடத்திற்கு வேலைக்காக சென்றாள். மாலாவின் முதலாளி மிகவும் மோசமானவர். மாலாவிடம் கடும் வேலை வாங்கினார்.

மாலா இரவு பகலாக உறங்காமல் வேலை செய்தாள். ஒழுங்கான சாப்பாடும் இல்லை. உடை இல்லை. சிறிய சிறிய தவறுகளுக்கெல்லாம் அடியும் வாங்கினாள். ஆனால் தனது சகோதர்களை வளர்க்கும் நோக்கில் அதைப் பொருட்படுத்தவில்லை. தொடர்ந்தும் வேலை செய்தாள். அவளுக்குக் கிடைக்கும் சம்பளம் தனது சகோதர்களுக்கு உணவு கொடுக்கவே முடிந்தது. படிப்பிற்குப் போதவில்லை. இதனால் மாலா மிகவும் கவலையடைந்தாள்.

இவ்வாறு நாட்கள் பல ஓடின. மாலாவின் முதலாளியின் வீட்டிற்கு விருந்தாளிகள் வந்தனர். அந்த விருந்தாளிகள் போகும் போது முதலாளியின் தொல்லைபேசியை விளையாட்டிற்காக எடுத்துச் சென்றனர். தொலைபேசியை காணாத முதலாளி மாலா தான் எடுத்துவிட்டாள் என்று எண்ணி மாலாவிடம் கேட்டுக் கடும் சித்திரவதை செய்தார். மாலா எவ்வளவு சொல்லியும் கதறி அழுதும் அவர் கேட்கவில்லை. இறுதியாக முதலாளி மாலாவிற்கு கைகளில் சூடு வைத்தர். மாலா துடித்துப் போனாள். இவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலாவிற்கு செய்யும் கொடுமைகளை அவதானித்த அயல்வீட்டு பெண்மணி சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்திற்குச் சென்று மாலாவின் கொடுமைகளை சொன்னாள். சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகள் மாலாவின் வீட்டுற்கு மாலாவைப் பார்க்க வந்தனர். மாலாவின் தோற்றத்தையும் அவள் கையையும் கண்டவுடன் அவர்களை அறியாமலே கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தது.

பின்னர் அவ்வதிகாரிகள் மாலாவையும் அவள் சகோதர்களையும் பராமரிக்க ஏற்பாடு செய்து அவர்களுக்கு கல்வி கற்க உதவி செய்தனர். முதலாளி சிறுவர் உரிமையை மீறியதால் அவருக்கு ஆறுமாத சிறை தண்டனை வழங்கப்பட்டது. பின் மாலாவும் அவள் சகோதர்களும் நன்றாகக் கல்வி கற்று உயர்நிலையை அடைந்தனர். பின் மாலா தன்னைப் போன்றே வறுமைப்பட்ட பிள்ளைகளை சேர்த்து சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் ஒன்றை அமைத்து அந்தப் பிள்ளைகளுக்கு உதவி செய்து வந்தாள்.

ஆகவே, சிறுவர்கள் எமது நாட்டின் செல்வங்கள். அவர்கள் துன்புறுத்தப்படாமல் அவர்களது உரிமைகளைப் பாதுகாப்பது நாட்டின் ஒவ்வொரு பிரஜையினதும் கடமையாகும்.

**S. கேசகாயினி**
தரம் - 07,
மட்/ஆரையம்பதி மகா வித்தியாலயம்.
'சிவா சிறுவர் கழகம்'

# பல்சுவைச் செய்திகள்


- *முதலைகளுக்கு வாழ்நாளில் எத்தனை தடவைகள் பல் விழுந்தாலும் மறுபடியும் முளைத்துவிடும்.*
- *ஆமைக்கு பற்கள் கிடையாது.*
- *லெமன் எனப்படும் ஒருவகைச் சுறாவுக்கு ஓராண்டில் மட்டும் 24 ஆயிரம் புதிய பற்கள் தோன்றுகின்றன.*
- *ஒக்டோபஸ்சுக்கு கிளிமூக்கு போன்று ஒரேயொரு பல் மட்டுமே உண்டு.*
- *டொல்பினின் மேல்த்தாடையில் 80 பற்களும், கீழ்த்தாடையில் 80 பற்களும் இருக்கும்.*
- *தேரைக்குப் பற்கள் இல்லை.*
- *பாம்பின் பற்கள் இரையைக் கடித்துச் சப்புவதில்லை. கவ்வி இரையை தப்பவிடாமல் செய்யவே பாம்புக்கு பற்கள் பயன்படுகின்றன.*
- *எலியின் மேல்தாடைப்பல் விழுந்துவிட்டால் கீழ்ப்பல் வேகமாக வளர்ந்து மூளையைத் துளைத்து விடும். இதனால் எலி இறந்துவிடும்.*
- *தேனி ஒருமணி நேரத்தில் 800 பூக்களிலிருந்து தேனை எடுத்துவிடும்.*
- *சிறுத்தையின் ஓட்ட வேகம் மணிக்கு 112 கிலோமீற்றராகும்.*
- *பாம்புகள் ஒலியலைகளை அவற்றின் நாக்குகளால்தான் உணர்கின்றன.*
- *விலங்கினங்களில் யானைக்கு மட்டுமே 4 கால்களையும் மடக்கும் திறன் உண்டு.*

**ஐ.கௌரிக்கா** – (தரம் - 9K),
மட்/கிரான்குளம் விநாயகர் மகா வித்தியாலயம்,
**'சரவணா சிறுவர் கழகம்'**

**ஆக்கங்கள் ஆக்கியோரையே சாரும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் பராமரிப்பில் பங்களிப்போர்

அண்மைக் காலமாக சிறுவர்கள் உலக நாடுகளில் அதிக கவனத்திற்கும் பாதுகாப்பிற்கும் உள்ளானவர்களாகக் காணப்படுகின்றார்கள். சிறுவர்களது சகல உரிமைகளும் பேணப்பட்டு அவர்களுக்கென தனியான பாதுகாப்பு அமைப்புக்களும் அமைக்கப்பட்டு பல நிறுவனத்களூடாகவும் பாதுகாப்பு வழங்கப்பட்டும் வருவதை நாம் கண்ணூடாகக் காண்கிறோம்.

இன்று சிறுவர்கள் அதிக பாதுகாப்பிற்கு உட்பட்டு வருகிறார்கள் என்றால் அவர்கள் பலவாறான இம்சைகளுக்கு உட்பட்டுள்ளார்கள். அண்மைக்காலமாக நாம் அனைவரும் நிறைய சிறுவர் துஷ்பிரயோக நிகழ்வுகளைக் கேள்வியுற்றும், நேரடியாகப் பார்த்துமுள்ளோம் என்பதை நாம் எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. இவ்வாறான நிகழ்வுகள் இடம்பெறுவதற்கு முக்கிய காரணமாக நாம் கூறக்கூடியது சிறுவர்கள் சிறந்ததொரு பராமரிப்பற்ற நிலையில் காணப்படுவதாகும். அவ்வாறு பராமரிப்பாக அவர்கள்காணப்படுவார்களேயானால் எவ்வித துஷ்பிரயோகத்திற்கும், கடத்தல்களுக்கும், மனிதர்களது இம்சைகளுக்கும் உட்படமாட்டார்கள்.

சிறுவர்கள் தனது சிறுவயதிலிருந்தே தங்களுக்குள் ஒரு சவால்களையும் பலவித நோக்கங்களையும் கொண்டுள்ளார்கள். அந்த சவால்களையும் நோக்கங்களையும் வெற்றிபெற அவர்களுக்குத் தேவையானது சரியான வழிகாட்டலேயன்றி வேறில்லை. இவ்வாறு சிறுவர்களின் பராமரிப்பில் பங்கேற்பவர்களாக பெற்றோர், பெரியோர், முதியோர், ஆசிரியர்கள், சமூகம், அதிகாரிகள், சேவைநல உத்தியோகஸ்தர்கள், சேவைநல நிறுவனங்கள், அமைச்சுக்கள் போன்றன சிறுவர்களது பராமரிப்பில் பங்கேற்பவராக உள்ளன. இவ்வாறு சிறுவர்களது பராமரிப்பில் அடங்குபவர்களாக முதலில் பெற்றோர்களே உள்ளனர். ஏனென்றால் சிறுவன் ஒருவன் வீட்டிலுள்ள அனைவரிடம் பழக்கப்பட்டுவிட்டே வெளி உலகிற்கு காலடி எடுத்து வைக்கிறான். எனவே, வீட்டிலேயே அவன் பெற்றோர்களால் சிறந்த பராமரிப்பிற்கு உட்பட வேண்டும். அவ்வாறு சிறுவனை அல்லது சிறுவர்களை பராமரிக்க வேண்டியது பெற்றோரது தலையாய கடமையாகும்.

இன்று அவ்வாறு பராமரிப்பது மிகவும் குறைவாகக் காணப்படுகிறது என்றால் அதை நாம் ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும். இன்று ஆங்காங்கு சிறுவர்கள் துஷ்பிரயோகங்களுக்கு உட்படுகிறார்களென்றால் அதற்கு முக்கிய அடிப்படைக் காரணம் பெற்றோர்கள்தான். இதனைக் கருத்திற்கொண்டே "சிறுவர் துஷ்பிரயோகங்கள் குறித்து விஷேட கவனம் செலுத்தப்படும்" என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை கடந்த மார்ச் மாதங்களில் அறிவித் தது. சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றி கிடைக்கப் பெறும் முறைப்பாடுகள் குறித்து அதிகரித்து வருவதனாலேயே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக மேலும் எமக்கு அறியக்கிடைத்தது என மேலும் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

மேலும் பாதுகாப்பற்ற சிறார்களின் நலன்கருதி பல்வேறு திட்டங்களும் அமுல்படுத்தப்பட்டுள்ளன. இன்றைய நிலையில பெற்றோர்களின் பராமரிப்பில் இல்லாத சிறுவர்கள் மட்டுமன்றி; பெற்றோர்களின் பராமரிப்பில் இருக்கின்ற சிறுவர்களும் கூட பாதுகாப்பற்ற நிலைமைக்கு முகங்கொடுத்து வருவதாக நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களத்திற்கு அறியக்கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய மேற்படி நிலைமைகளுக்கு ஆளாகியிருக்கும் சிறார்கள் பற்றிய விபரங்களை கிராம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவை உத்தியோகத்தரிடம் அல்லது பிரதேச செய லாளர் அலுவலகத்திலுள்ள சிறுவர் உரிமை ஊக்கப் படுத்தும் அதிகாரியிடம் அல்லது நன்னடத்தை அலு வலக அதிகாரியிடம் அல்லது சிறுவர் மற்றும் மகளிர் தொடர்பான பொலிஸ் பிரிவிடமோ வழங்கி அந்த சிறார்களுக்கு தேவையான உதவிகளைப் பெற்றுக் கொள்ளலாம் என நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களம் அறிவித்துள்ளதை நாம் அறியலாம்.

அடுத்ததாக சிறுவர்கள் பராமரிப்பிற்குள்ளாகும் அனுபவ நிலையமாகவும் ஒழுக்கத்தைக் கற்றுக்கொள் ளக்கூடிய கலைப்பீடமாகவும் காணப்படுவது பாடசா லையாகும். பாடசாலையில் சிறுவர்கள் ஆசிரியர்க ளாலேயே சரியான வழிகாட்டுதல்களுக்கு உட்படுகி றார்கள். தன் வகுப்பறையில் ஆசிரியர்களிடம் வழி காட்டல்களையும் நன்னெறிக் கருத்துக்களையும் அவர்கள் பெற்றுக்கொள்ளலாம். வீட்டில் பிள்ளைக ளாக வெளியில் சிறுவர்களாக காணப்படுபவர்கள் பாடசாலையில் மாணவர்களாக வழிநடத்தப்படுகி றார்கள்.

மாணவர்கள் தங்கள் அறிவைப் பெற்றுக்கொள் ளவும் எண்ணக்கருக்களைக் கட்டியெழுப்பவும் மிக வும் பொருத்தமான இடமாக வகுப்பறைகள் அமை கின்றன. வகுப்பறை என்பது பாடசாலையில் ஓர் உப அலகாகும். அல்லது கற்றலுக்கான களமாகும். இக்களத்தில் பல வகையான நிகழ்வுகள் இடம்பெறு கின்றன. பல வகைகளிலும் வேறுபாடு கொண்ட மாண வர்கள் அவ்வகுப்பறையில் காணப்படுகின்றனர்.

இதன் மூலம் ஏற்படும் பிரச்சினைகளை இனங் காணவும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும் மாண வர் – ஆசிரியர் தொடர்பு மிகவும் முக்கியமானதாகும். அவ்வாறே ஆசிரியர் சமூக தொடர்பு முக்கியமான தாகும். முன்னேற்றகரமான பெற்றோர்களாலும் ஆசி ரியர்களாலும் மாணவர்களிடையே அறிவையும் ஆற் றல்களையும் சிறந்த பராமரிப்பையும் வழங்க முடிகிறது.

வகுப்பறையில் மாணவர்கள் சமூகத்திற்குப் பொருத்தமான வகையில் நடத்தைகளில் மாற்றங் களை ஏற்படுத்தவேண்டும். இதுவே சமூகமயமாதல் எனப்படுகிறது. வகுப்பறையில் சமவயதுக் குழுக்க ளின் தொடர்பினால் பிள்ளைகளுக்குடையே மனோ பலம் அதிகரிக்கும். ஏற்றுக்கொள்ளத்தக்க சமூக நடத்தை பற்றியும் தெளிவு கிடைக்கும். சமூகத்திறனை வளர்க்கும் களமாகவும் வகுப்பறை அமைந்துள்ளது.

இவ்வாறு பலவாறான திறன்களை சிறுவர்கள் பாடசாலை மூலமாகப் பெற்றுக்கொள்கின்றனர். இவ் வாறே முன்னேற்பாதையில் ஒரு சிறுவன் தன்னை இட்டுச் செல்வதற்கு அவனுக்கு சிறந்த பராமரிப்பு பாடசாலையில் கிடைக்கிறது என்றால் அது மிகை யாகாது.

அடுத்ததாக, சிறுவர்களுக்கு சிறந்த பராமரிப்பு பலவாறான நிறுவனங்களிலிருந்து கிடைக்கிறது. அர சாங்கமானது சிறுவர் பராமரிப்பு அதிகார சபை, நன் னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களம் எனப் பல அமைப்புக்களை நிறுவியிருக்கிறது. இது தவிர ஏனைய பல தனியார் நிறுவனங்களும் தொழிற் படுவதை நாம் அறியலாம். இதற்கு உதாரணமாக யுனிசெப் நிறுவனம் தொழிற்படுவதைக் குறிப்பிடலாம்.

தனியார் நிறுவனங்கள் சிறுவர்களுக்காகவென இயங்குகின்றன. சிறுவர்களுக்குச் சிறந்த கற்றல் ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும், பராம ரிப்பையும் வழங்குகின்றன. இவ்வாறாக பல அமைச் சுக்கள், நிறுவனங்கள் காத்திருக்கின்ற வேளையில் சிறுவர்கள் துஷ்பிரயோகங்களுக்கு உட்படுவது அவ் வாறான நிறுவனங்கள் இயங்குவதற்கே சிலவேளை தடையாக அமைகிறது.

ஸ்பெயின் நாட்டில் ஆல்மெடா டிலாகெஸ்டா என்ற கிராமம் உள்ளது.இது தலைநகர் மாட்ரிடில் இருந்து நூறு மைல் தொலைவில் காணப்படுகிறது. இங்கு 70 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் மட்டுமே வசிக்கின்றனர்.

கடந்த 1940ம் ஆண்டில் இங்கு 500 குடும்பங் கள் இருந்தன. அப்போது பெரும்பாலானவர்கள் இந்த இடத்திலிருந்து வெளியேறிவிட்டனர். அதன்பிறகு திரும்பவில்லை. தற்போது அங்கு 15 குடும்பத்தினரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்கின்றனர். அவர்கள் அனைவரும் 65 வயது முதல் 70 வயதுக்கு மேல்தான் உள்ளனர். இதனால் அங்கு 40 வருடங்களாக புதிதாக குழந்தைகள் பிறக்க வில்லை. இப்போது அங்கு இருப்பவர்கள் 65 வயது டையவர்களே வயது குறைந்த இளைஞர்களாக உள்ளனர்.

இது ஒரு வித்தியாசமான கிராமம் என அங்கு வாழும் முதியவரால் குறிப்பிடப்பட்டுள்ளது. அங்கு 16ம் நூற்றாண்டு கிறிஸ்தவ தேவாலயம் உள்ளது. கிராமத்தின் நுழைவு வாயிலில் அழகிய விளை யாட்டு மைதானம் இருந்தும் கூட குழந்தைகள், சிறுவர்கள் இல்லாததால் ஆட்கள் எவருமின்றி வெறிச் சோடிக் கிடக்கிறது.

இவ்வாறே இருக்கும் ஸ்பெயின் நாட்டின் கிரா மம் குழந்தைகளற்றுக் குழந்தைகளை இழந்த நிலை யில் உள்ளது என்றால் பாருங்கள். எம்மிடம் குழந் தைகள் இருந்தும்கூட சில இடங்களில் கவனிப்பா ரற்று நிகர்க்கதியான நிலைக்கு உள்ளான சிறு வர்கள் எத்தனையோபேர் உள்ளனர். பெற்றோர்கள் வீட்டில் முதற்காலடி வைக்கும் சிறுவர்களுக்கு சிறந்த அரவணைப்பைக் காட்டவேண்டும். அவ்வாறு சிறந்த பராமரிப்புக் கிடைக்குமானால் சிறுவன் நல்ல பிர ஜையாக நற்கதிராக விளைந்து மகிழ்வூட்டுவான் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை.

**K.M.மிஹ்றாஜ் பேகம்**
தரம் - 13
மட்/பாலமுனை அலிகார் மகா வித்தியாலயம்.
**'இர்ஷாத் சிறுவர் கழகம்'**

# அறிந்துகொள்வோம்!



01. உலகிலேயே ஜனாதிபதி பதவிக்காலம் ஒரு வருடம் மாத்திரம் உள்ள நாடு?
**சுவிற்சிலாந்து**

02. பாலைவனவே இல்லாத நாடு?
**லெபனான்**

03. அழும் சுவர் உள்ள நாடு?
**ஜெருசலேம்**

04. பிரான்ஸ் நாட்டின் தேசிய சின்னம்
**லில்லிமலர்**

05. கால்பந்து வீரர் மரடோனாவின் நாடு?
**ஆர்ஜன்டினா**

06. ஒரேயிடத்தில் நின்றுகொண்டு பறக்கும் ஆற்றல் உள்ளது?
**தும்பி (குட்டாம்பூச்சி)**

07. விழிகளை அசைக்க முடியாத பறவை
**ஆந்தை**

08. உயிரினங்களில் அதிக பார்வை கொண்ட உயிரினம்
**பறவைகள்**

09. கசகசா என்பது
**அபின் செடியின் விதைகள்**

10. டல் உள்ள பறவை
**வௌவால்**

ப.அனுஷா – தரம் - 8V,
மட்/கிரான்குளம் விநாயகர் மகா வித்தியாலயம்.
'விஷ்ணு சிறுவர் கழகம்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் மீதான முதலீடு நாட்டின் அபிவிருத்தி அல்லவா?

பிள்ளைப் பருவமானது மானிட வாழ்வின் ஒரு முக்கிய காலகட்டமாகும். எனவே ஒரு பிள்ளை அப்பருவத்திலேதான் அனுபவிக்க உரித்துடைய அனைத்து உரிமைகளையும் உரியவாறு அனுபவிப்பதற்கான உரிமையைப் பெற்றிருக்கிறது. மேலும் பிள்ளைப் பருவத்துக்குரிய உடல், உள முதிர்ச்சியின்மை காரணமாக ஒரு பிள்ளையின் பிறப்புக்கு முன்பும் பின்பும் வளர்ந்தோர் பிள்ளையின் மீது விசேட கண்காணிப்புச் செலுத்தவேண்டும் என்பது ஏற்கப்பட்ட ஒரு நியதியாகும்.

இவ்வாறாக ஒரு பிள்ளையின் அல்லது அதன் பெற்றோரின் அல்லது சட்டபூர்வமான பாதுகாவலரின் இனம், மதம், மொழி, பால், சமூகநிலை, அரசியல் கொள்கை மற்றும் வேறு எத்தகைய வேறுபாடுகளையும் கவனத்திற்கொள்ளாது ஒரு பிள்ளையானது தான் அனுபவிக்க உரித்துடைய சகல உரிமைகளையும் அனுபவிக்கும் உரிமை ஒவ்வொரு பிள்ளைக்கும் உண்டு.

பிள்ளைகளது உரிமைகளை பறிப்பவர்கள் அவ்வுரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய வளர்ந்தோர்களே. அவர்கள் வீட்டில், பாதையில், பாடசாலையில், வேலைத்தளத்தில் மற்றும் பல்வேறு இடங்களில் அவர்களின் உரிமைகளைப் பறித்துக் கொள்கின்றனர். இவ்விதமாக அவர்கள் தெரிந்தோ தெரியாமலோ பிள்ளைகளின் உரிமைகளை மீறுவதனால் அவர்கள் பலவாறான உள, உடல் சார்ந்த இன்னல்களுக்கு ஆளாகின்றனர்.

வயதுவந்தோர் பிள்ளைகளின் உரிமைகளை எவ்வாறு மீறுகின்றனர்? அல்லாதுவிடின் பிள்ளைகளின் உரிமைகளை எவ்வாறு அபகரித்துக்கொள்கின்றனர்? இவ்வினாக்களுக்கு விடையைப் பெற்றுக்கொள்வதற்கான மிகச் சிறந்த முறையாக விளங்குவது தம் உரிமைகள் இழக்கப்பட்டதன் காரணமாக வேதனைக்கும் நிர்க்கதியான நிலைமைக்கும் உள்ளான சிறுவர்களின் சம்பவங்களைத் தொடர்புசாதனங்களான தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகைகள் போன்றவற்றின் வாயிலாக எம்மால் அறியக்கூடியதாகவுள்ளது.



பெற்றோரது அன்பையும் பாதுகாப்பையும் இழக்க நேரும்போது பல்வேறு இடங்களில் வயதுவந்தோரால் உளத்தாக்க அநியாயங்களுக்கு ஆளாகி கல்வி வாய்ப்பு, சுகா தார வசதி போன்ற அடிப்படை உரிமைகள் இழந்து சுரண்டலுக்கு ஆளாகி தம் உரிமைகளை இழந்து பிள்ளைகள் சிலரது பரிதாபமான அனுபவங்களை அறிந்துள்ளோம். இவ்வாறான காரணங்களால் பிள் ளைகளின் உடல், உள, ஒழுக்கவியல், மதம் சார்ந்த மற்றும் சமூகஞ்சார்ந்த பூரணத்துவ மான வளர்ச்சியை உறுதிப்படுத்தும் பொருட் டும் சுரண்டல், அநியாயங்ள் என்பன பிள்ளைகள் மீது இழைக்கப்படாமல் அவர்களைக் காப்பாற்றவும் இலங்கை உட்பட ஏனைய உலக நாடுகள் இணைந்து ஓர் உடன்படிக்கை செய்துகொண்டுள்ளன.

மேலும் பிள்ளைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும் என்ற கோட்பாடு, அதாவது சமூகத்தின் வளங்கள் முதலாவதாக பிள்ளையின் உடல், உள விருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யைக் காக்கும் பொருட்டே செலவிடப்பட வேண்டும் என்பது இலங்கை உட்பட உலகின் பெரும்பாலான நாடுகள் ஏற்றுக்கொண்ட ஓர் விழுமியமாகும்.

அடுத்ததாக சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது அதாவது வயது வந்தோர் ஒருவரைக் கொண்டு யாதேனும் ஒரு வேலையைச் செய்யும்போது செலுத்தும் பணத்தைவிட குறைந்தளவு பணத்தைச் செலுத்தி ஒரு வேலையைச் செய்வித்துக் கொள்ளலாம் என்பதாகும். மேலும், பிள்ளைகளை மிக எளிதாக எந்தவொரு விடயத்துக்கும் ஈடுபடுத்திக் கொள்ளலாம் என்பதாலாகும்.

பிள்ளைகளது உரிமைகளைப் பாதுகாப்பதற்காக மிகப் பிரதான பொறுப்பினை உடையோர் பிள்ளைகளது பெற்றோர் அல்லது சட்டரீதியான பாதுகாவலரே. அவர்கள் இயற்கையான பாதுகாவலரே. தார்மீக ரீதியாகவும் சட்ட ரீதியாகவும் பிள்ளைகள் மீது பெற்றோர் கொண்டுள்ள அதிகாரம் என்ற காரணத்தால் அது சட்டத்தாலே "பெற்றோர் அதிகாரம்" எனக் குறிப்பிடப்படுகிறது.

மேலும் ஒரு நாட்டுக்குச் சொந்தமான மிகப் பெறுமதியான வளம் அந்நாட்டின் சிறுவர்களேயாவர். இக்கருத்தை நிறுவ மீண்டும் விடயங்களை சமர்ப்பித்தல் அவசியமில்லை. ஏனெனில் பிள்ளைகள் எனப்படுவோர் நாட்டின் நிகழ்காலமும் எதிர்காலமும் ஆவார்கள். எனவே ஒரு நாட்டின் நிகழ்கால இயைவையும் எதிர்கால நிலைப்பாட்டையும் தீர்மானிக்கும் சக்தி பிள்ளைகளே என்பதில் எந்த ஐயமுமில்லை.

மேலும் பிள்ளைகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் விடயத்தில் பெற்றோரும் சட்டபூர்வமான பாதுகாவலர்களும் முதன்மை நிலையைப் பெறுகின்றனர். இதற்கு அடுத்த பொறுப்பாளிகளாக பிள்ளைகளின் கல்வியுடன் தொடர்புடைய ஆசிரிய குழுவினராவார்கள். ஒரு பிள்ளையை உலகில் தோற்றுவித்து உடல் ரீதியாக அவனை வளர்த்து ஆளாக்கும் தாய், தந்தைபோன்று இருப்பவர்களே இவர்கள். இவர்களைப் பொறுத்தமட்டில் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புக்கள் காரணமாக பெற்றோருக்குச் சமமான உரிமைகள் பல ஆசிரியர் வசம் உண்டு என சட்டம் ஏற்றுக்கொண்டுள்ளது. அத்துடன் பிள்ளைகளது எதிர்காலத்தை நெறிப்படுத்துவதில் தீர்மானத்தை மேற்கொள்ளும்போது ஆசிரியர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்புக்கள் பெற்றோரது பொறுப்புக்களையும் தாண்டிச் செல்லத்தக்க வாறு பலம்பொருந்தியவை என்பது "வொட்சன்" போன்ற கல்வியியலாளர்கள் குறிப்பிட்டதன் வாயிலாகப் புலனாகின்றன.

எனவே பிள்ளைகளின் முன்னேற்றத்திற்கு ஏதுவாகும் எந்தவொரு முயற்சியாயினும் அது நாட்டின் நிலைப்பாட்டிற்கும் அபிவிருத்திக்கும் அர்த்தமுள்ள பங்களிப்பாக அமையும். ஒரு நாட்டினது நிலைப்பாட்டினைப் பொறுத்தமட்டில் அக்கறைகொண்ட ஒவ்வொரு பிரஜையும் அந்நாட்டினது பிள்ளைகள், தலைமுறையினரின் முன்னேற்றத்தில் பங்குதாரராய் இருப்பது அவசியமாகும்.

பிள்ளைகளில் உள ரீதியாக அல்லது உடல் ரீதியாக ஏற்படுத்தக்கூடிய அனைத்து இன்னல்களையும் ஒழித்துக்கட்டக்கூடியவாறு எல்லா வழிகளாலும் பிள்ளைகளின் நன்மை தொடர்பாக ஒருவர் தம் பொறுப்புக்களையும் கடமைகளையும் நிறைவேற்றல் வேண்டும். மிகத் திட்டவட்டமாகக் குறிப்பிடுவதாயின் ஒரு நாட்டின் நிலைப்பாட்டையும் அபிவிருத்தியையும் மனதார விரும்பும் அனைத்துப் பிரஜைகளும் பிள்ளைகளது உரிமைகளைப் பாதுகாப்பதன் மூலம் தம் கடமைகளையும் பொறுப்புக்களையும் சரியாக நிறைவேற்றுவது அவசியமாகும். அத்துடன் பிறரைக் கொண்டும் அக்கடமைகளையும் பொறுப்புக்களையும் உரியவாறு நிறைவேற்ற ஆவன செய்தல் வேண்டும்.

---

**சிவசுந்தரம் ஹர்சவர்த்தன்** - (தரம் - 8)
மட்/ஆரையம்பதி இ.கி.மிசன் மகா வித்தியாலயம்.
'இராமகிருஷ்ணர் சிறுவர் கழகம்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எம் பெற்றோர்களே! எமக்கு முன்னுதாரணமாகுங்கள்...

பூவிடை பொலிந்த பிஞ்சுகள், பொன்னெனப் பாதுகாக்கப்படவேண்டியவை. அவ்வாறு இல்லாவிடின் விரைவில் பின்னம் ஏற்பட்டு முழு முயற்சியுமே பாழாகிப்போய்விட வேண்டியதொரு சூழ்நிலை உருவாகலாம். இது இயற்கை நமக்குக் கற்பிக்கும் ஒரு பாடநெறி. சின்னஞ் சிறுவர்களாக வாழும் மனிதப் பிஞ்சுகளும் அவ்வாறே பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியவர்களாவர்.

பசிக்க உணவூட்டுவதும் சுகயீனமேற்படின் வைத்தியச் சிகிச்சை அளிப்பதும் புத்தாடை புனைந்து அழகுபார்ப்பதும் மட்டும் சிறுவர் பாதுகாப்பென்று வாழாவிருந்திட முடியாது. அதற்கு அப்பாலும் பல ஆபத்துக்கள், விபத்துக்கள் அவ்வப்போது தோன்றி அவர்களது வாழ்க்கையை அலைக்கழித்துவிடலாம். அவற்றை எலலாம் உடனிருந்து அறிந்துகோண்டு அவற்றிற்கான பாதுகாப்பினை வழங்குவதும் அறிவுரைகள் மூலம் உரிய பாதைக்கு இட்டுச் செல்வதும் பெற்றோர்களதும் பாடசாலை ஆசிரியர்களதும் ஏனைய சமூக உறவினர்களதும் தலையாய பணிகள் என்பதை நிராகரித்துவிட முடியாது.

## எதிர்நோக்கும் தீமைகள்

சிறுவர்களைப் பொறுத்தவரையில் அவர்களது வாழ்வோடும் வளத்தோடும் சம்மந்தப்பட்ட பாதுகாப்பு விடயங்கள் உள்ளார்ந்த நிலையிலிருந்தும் வெளியாந்த நிலையிலிருந்தும் தோற்றம் பெறக் கூடுமாதலால் இவை குறித்து மிகவும் அவதானத்துடன் இருக்கவேண்டிய பொறுப்பு பெற்றோரையும் அதனோடிணைந்த சமூகத்தையும் சார்ந்ததாகும்.

வீட்டில் தங்கிவாழும் சிறுவர்கள் எப்போதும் தமது பெற்றோரை அல்லது தமக்கு மிக விரும்பிய உறவினரை அல்லது ஆசிரியரை ஒரு முன்னுதாரணமாகவும் (Role Modal) கொண்டு தமது வாழ்க்கையை செப்பனிட முயலுவது சகசம். இத்தகையதொரு நிலையில் வீட்டிலுள்ள தந்தையரோ முன்னோர்களின் எவரோ குடிப் போதையில் நித்தம் நித்தம் ஈடுபடுபவர்களாக இருந்து அல்லோலகல்லோலப்படுமொரு சூழலைத் தோற்றுவிக்கும்போது அவ்வீட்டில் வளரும் குழந்தைகளும் அவற்றையே நன்கு மனதில் பதித்துக் கொண்டு அறநெறி பிறழ்ந்த வாழ்வுக்குத் தயாராகிவிடுவர். இவ்வாறே புகை பிடித்தல், குடிபோதை, பொய், களவு செய்தல் போன்ற காரியங்களுக்கு அடிமையாகி தம் எதிர்காலத்தைப் பாழடிக்குமோர் வாரிசாக வளர வழி வகுக்கிறது.

இவை யாவும் அகச்சூழலால் விளையுமோர் தீமையாகும். இந்த சமூக நன்னோக்குக் காரணிகளை முன்னிட்டு வீட்டிலுள்ள பெற்றோரும் பெரியவர்களும் ஒழுக்க விழுமியங்களைக் கடைப்பிடிக்குமோர் முன்னுதாரணங்களாக வாழ்ந்து வரவேண்டியது அவசியமாகின்றது. இதுவே அவர்கள் தங்களது சிறுவர்களுக்கு அளிக்கும் பாதுகாப்பும் அரவணைப்பும் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வெளியக தீச்செயல்கள்

மனிதன் ஒரு சமூகப் பிராணி. அவன் எப்போதும் சமூகத்துடன் தன்னை இணைத்தே உறவாட வேண்டிய கட்டாயமும் தேவையும் உடையவன். அது மட்டுமல்ல, பிறர் செய்கின்ற கருமங்களால் சடுதியாக கவரப்பட்டு தானும் அவர்களைப் போன்று பாவனை செய்வதில் ஒரு மனநிறைவும் திருப்தியும் அடைகிறான். குரங்கிலிருந்து மனிதன் பிறந்தவன் என்று இதனாற்றானோ கூறுகின்றனர் பெரியோர்.

சிறுவர்கள் எப்போதும் வீட்டில் அடைந்து இருந்து விடவும் முடியாது. அவர்கள் தன்னைப் பற்றி அறிந்துகொள்வதோடு தனது சூழல், சூழலில் ஏற்படும் மாற்றங்கள், அதற்கான காரணிகள் என்பவற்றையும் அறிந்துகொள்ள வேண்டும். இது அவசியமே.


சமூகத்தில் எல்லோரும் ஒரேவிதமாக வாழ்ந்து வருவதில்லை. பலரும் பல விதமாய் நடந்துகொள்வார். பெரும்பாலானோர் இழி பழக் கங்களைக் கைக்கொண்டவர்களாகவும் உலகம் பழித்தனவற்றை நாடுபவர்களாகவும் வாழ்ந்து வருகின்றனர். இத்தகையவர்களின் தொடர்பு களால் சிறுவர்கள் தாமாகவே பின்பற்றிக் கெட் டுப்போவதற்கும் வஞ்சகமான அவர்களது சூழ்ச்சி வலையில் விழுந்து போதைப் பொருள், கடத் தல்கள் மட்டுமல்லாது வழிப்பறி மற்றும் கொலை போன்றவற்றிற்கும் துணை நிற்பவர்களாகி விடுகின்றனர். இது சமூக அமைப்பிற்குப் பாரிய தொரு இழப்பாக மாறி விடுகிறது. ஆகவே சிறு வர்கள் அவ்விதமானதொரு சூழலுக்குள் தம்மை ஈடுபடுத்துவதைத் தடுத்து நிறுத்தி, அவர்களின் கவனத்தைச் சீரிய பாதைக்கு இட்டுச்செல்ல வேண்டிய பொறுப்பும் பக்குவமும் ஆசிரியர், பெற்றோர், சமூகம், அரசு என்ற இவ்வனைவ ருக்கும் உண்டு. வருமுன் காக்கும் திட்டமே வந்தபின் காப்பதிலும் சிறந்தது.

### அரச பாதுகாப்பு

சிறுவர்கள் தற்போது பல்வேறு வகை யான துஷ்பிரயோகங்களுக்கும் பலியாகி வரு வதாக பொதுவாகக் கூறப்படுகிறது. இத்தகைய சமூகவிரோத செயல்களில் வெளிநாட்டவர்களின் பங்கும் கணிசமாக உள்ளதெனவும் நம்பப் படுகிறது.

ஆகவே, அரசாங்கம் தற்போது நடை முறையிலுள்ள சட்டங்களை வலுவுள்ளதாக மாற்றியமைப்பதும், இளைஞர்களின் நோக்கி னைப் புரிந்துகொண்டு அவர்கள் அவ்விதம் பிறழாத வகையில் அவர்களின் தரத்திற்கும் தகுதிக்கும் ஏற்ற வகையான வாழ்க்கை வழி முறைகளை ஏற்படுத்திக் கொடுப்பதும் சிறுவர் பாதுகாப்பாக அமையலாம். தண்டனை பெறத் தக்க வழிமுறைகளிலும் பார்க்க அவர்களின் வழியில் சென்று மாற்றத்தைக் கொண்டுவர விழைவதே மிகுந்த பயனை நல்கும். சிறுவர் நன்னடத்தைப் பாடசாலை போன்ற தடுப்புப் பேணு முறைமைகளைக் கடைப்பிடித்தல் சாலச் சிறந்ததே.

எது எவ்வாறு இருந்தபோதிலும் இன் றையச் சிறுவர்கள் தான் நாளைய உலகின் சிற்பிகள், அவர்களது வாழ்வு வளமிக்கதாக இருந்தால் தான் நாடும் நாமும் நன்மைய டைய முடியும். ஏன்? மனித சமுதாயமே மேன்மை பெற இயலும். ஆகையினால் சிறுவர்களின் பாதுகாப்பு அவர்கள் சார்ந்த அரச நிறுவனங்க ளுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படாமல் ஒவ்வொரு பிரஜைக்கும் உரிய கடமை என்ற உணர்வுடன் செயற்படின் சீரிய விழுமியங்கள் கொண்ட உறுதியானதொரு சமுதாயம் உருவாகும் என்பது திண்ணம்.



**ர.நிறோஜினி**
தரம் - 13,
மட்/ஆரையம்பதி
இராமகிருஷ்ண மிஷன் மகா
வித்தியாலயம்.
'ஆரையூர் நிதம் சிறுவர்
கழகம்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இன்றைய சிறுவர்களைப் பொறுத்தவரை அவர்களது வாழ்க்கை ஓர் போட்டியானதாகவே காணப்படுகிறது. இதை எண்ணும் போது "வாழ்க்கையே போர்க்களம் வாழ்ந்துதான் பார்க் கணும்" எனும் பாடலே எமது மனதில் தோன்று கிறது. இன்றைய சிறுவர்களைப் பொறுத்தவரை அவர்கள் கல்வியில் அதிக ஈடுபாடு உடையவர்க ளாக இருந்தபோதிலும் அவர்கள் அக்கல்வியைக் கற்பதற்கு பல வழிகளில் இன்னல்களுக்கு இடங்கொடுக்க வேண்டியிருக்கிறது என்பதை நாம் உணர்கின்றோம். சிறுவர்கள் என்பவர்கள் சிறகு முளைத்த பறவைகளைப் போல சுதந்திரமாக வாழவேண்டியவர்கள் அல்லவா? ஆனால் இன்றைய சிறுவர்கள் கூட்டில் அடைத்த கிளிபோல வாழ்கிறார்கள் என்பது எல்லோரும் அறிந்த விடயமே. சிலருக்கு அது தெரிந்தாலும் அவர்கள் அதைப் பொருட்படுத்தாது சிறார்களின் வாழ்க்கையைச் சீரழிக்கின்றார்கள். இதனால் எமது சிறுவர்கள் உலகம் தெரியாதவர்களாக ஆகிவிடுகின்றனர்.

இவ்வாறாக சிறுவர்கள் தமது சமூகத்தினாலும், அயல் சூழலினாலும் சில வேளைகளில் குடும்பத்தினாலும் கூட பல இன்னல்களுக்கு முகங்கொடுக்க நேரிடுகிறது. இதற்கு சில உதாரணங்களாக சிறுவர்களை வேலைக்கு அமர்த்தல், அடிமைகளாகப் பயன்படுத்தல், கல்வி வழங்காது வீட்டு வேலைகளில் ஈடுபடச் செய்தல் என்பவற்றைக் குறிப்பிடலாம். இதனால் முப்பது சதவீ தத்திற்கு மேற்பட்ட சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படுகின்றனர். இதனால் எமது சிறார்களின் வாழ்க்கை "பரிதாப நிலைக்கு மாறிவிடுகிறது. இவ்வாறான சிறுவர்களின் வாழ்க்கை எப்போது சீராகும் என்பது இன்னும் கூட ஓர் கேள்விக்குறியாகவே காணப்படுகிறது. இன்று வாழும் சிறுவர்கள் எமது நாட்டின் நாளைய தலைவர்களாக ஆகவுள்ளவர்கள் என்பதை அறிந்தும் அறியாதது போல் இவர்கள் செய்யும் செயல்கள் மாற்றியமைக்கப்படவேண்டிய விடயமாகும். சிறுவர்களின் முன்னேற்றத்திற்கு நாம் அடித்தளமாக அமைய வேண்டுமேயல்லாமல் ஆயுதமாக அமைந்துவிடக் கூடாது என்பதை நன்கு புரிந்து கொள்ள வேண்டும். அதேபோல் அவர்களது கருத்துக்களுக்கும் செயற்பாடுகளுக்கும் நாம் மதிப்பளிக்க வேண்டும். அது அவர்களுக்கு ஓர் ஊக்குவிப்பாய் அமைவதுடன் வாழ்க்கையில் வரும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் திறனையும் வளர்த்துக்கொள்ள உதவுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தபோதிலும் இதைத்தவிர எமது சிறு வர்களின் வாழ்க்கையைச் சீரழிப்பதற்கென மேலும் சில காரணிகளும் உள்ளன. அவை இணையம், செல்லிடத் தொலைபேசி, தொலைக்காட்சி என் பனவாகும். சிறுவர்கள் இவற்றைச் சரியான முறை யில் பயன்படுத்தாமல் தவறான முறைகளில் பயன் படுத்துவதால் அவர்களது கனவுகளை, இலட் சியங்களை ஒரு நொடியில் அழிக்கும் காரணிக ளாக இவ்நவீன இயந்திர சாதனங்கள் உள்ளன. இதனால் சிறுவர்கள் தமது கல்வியில் சரியான முறையில் அவதானம் செலுத்துவதற்கு முடியாத வர்களாக மாறிவிடுகிறார்கள்.

இப்படி இவர்கள் தவறான வழிகளில் செல்வதை அறிந்து அவர்கள் அதைச் சரியான முறையில் பயன்படுத்த வைப்பதற்கு நாம் முயல வேண்டும். இவ்வாறு நாம் அவர்களை ஓர் சரியான பாதை யில் இட்டுச் செல்வதால் அவர்களது நாளைய வாழ்க்கை ஒளிமயமாக மாறிவிடும் என்பதை நாம் நன்கு அறிந்துகொள்ள வேண்டும். ஆகவே இன் றைய சிறுவர்களை நல்ல முறையில் நற்பிரஜை யாக மாற்றுவது பெரியோர்களாகிய எமது கட்டா யக் கடமையாகும் என்பதை நாம் ஒவ்வொருவரும் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். சிறுவர்களை சுதந்திரமாக வாழவிடுங்கள். அப்பொழுது அவர்க ளுடைய எண்ணங்கள், செயல்கள், நடத்தைகள் என்பனவும் சுதந்திரமாய் அமையும். இதனால் இவர்கள் ஓர் கட்டுக் கோப்பான வாழ்க்கையை வாழப் பழகிக் கொள்வார்கள். ஆகவே, இவ்வாறான சிறுவர்களின் உரி மைகளைப் பாதுகாப்பது எம் ஒவ்வொருவரினதும் கடமையா கும். சிறுவர் உரிமை என்னும் போது கல்வி, பாதுகாப்பு, உணவு, உடை, உறையுள் என்பவற்றை நாம் மிகவும் முக்கியமானதாகக் கூறவேண்டும். ஓர் சிறுவனை நல்ல நிலைக்கு இட்டுச் செல்வ தற்கு இக்காரணிகள் அனைத்தும் அவசியமாகும். ஆகவே, நாம் இன் றிலிருந்து விழித்தெழுவோம்! எமது சிறுவர்களின் வாழ்க்கை யைக் காப்பாற்றுவோம். அவர்களை ஓர் நல்ல பிரஜையாக மாற்றுவ தற்கு அனைவரும் ஒன்றிணை வோம்.

**பி.பவித்திரன்**
தரம் - 10,
மட்/ஆரையம்பதி இராமகிருஷ்ண
மிஷன் மகா வித்தியாலயம்,
'ஆதிவைரவர் சிறுவர் கழகம்.'

"If we are to teach real peace in this world, and if we are to carry on a real war against war, we should have to begin with the children"

**- Mohandas Gandi**

"Children our most valuable natural resource"

**- Herbert Hoover**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்/போதனா வைத்தியசாலையின்

# சிறுவர்கள் சேவைகள் ஓர் அறிமுகம்

இப்போதனா வைத்தியசாலையானது இரு சிறுவர் விடுதிகளையும், ஒரு விசேட சிசுக்கள் பராமரிப்பு பிரிவையும் (Special Care Baby Unit) கொண்டது.

அத்துடன் வெளி நோயாளர் பராமரிப்பிற்காக பின்வரும் சாய் சாலைகள் (Clinic) நடத்தப் பட்டு வருகின்றது.

- **சிறுவர் சாய்சாலை (Paediatric Clinic)** ⟶ *திங்கள் காலை 8.00 மணிமுதல் வியாழன் காலை 8.00 மணி வரை*
- **சிசுக்கள் சாய்சாலை (Well baby Clinic)** ⟶ *புதன் காலை 8.00 மணிமுதல்*
- **சிறுவர் திறன் ஆய்வு சாய்சாலை (Child Guidance Clinic)** ⟶ *செவ்வாய் பிற்பகல் 1.00 மணிமுதல் 3.00 மணி வரை*
- இது விசேட தேவையுள்ள சிறுவருக்கான சாய்சாலை *(Clinic)* இதில் பல்திறமைக்கான சேவைகள் ஊழியர்களின் பங்களிப்புடன் வழங்கப்படுகின்றன.
- ஆஸ்மா நோயுள்ள சிறுவர்களுக்கு உதவும் வகையில் பெற்றோருக்கான மாதாந்த அறிவூட்டல் நிகழ்வுகள் *(Health Education Programme)* நடத்தப்பட்டு வருகின்றன.
- உளநல சேவைப் பிரிவினரால் நடாத்தப்படும் பிள்ளைகள், மற்றும் கட்டிளமைப் பருவத் தினருக்கான உளநல சேவைகள் *(Child & Adolecent Service)* வெள்ளி பிற்பகல் 1.30 மணிமுதல் நடைபெற்று வருகின்றன.

இதில் பின்வரும் பிரச்சினைகளிற்கான சேவைகள் வழங்கப்படுகின்றன.

- நடத்தைப் பிரச்சினைகள்
- உணர்வுப் பிரச்சினைகள் (பதகளிப்பு, மன அழுத்தம், அதிக கோபம், பரீட்சை பற்றிய பயம்)
- உறவுப் பிரச்சினைகள்
- அறிவாற்றல் பிரச்சினைகள்
- தொடர்பாடல் பிரச்சினைகள்

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான பிரச்சினைகளைக் கையாள்வதற்காக "மாவட்ட சிறுவர் பாதுகாப்பு பிரிவு" இயங்கி வருகின்றது. இது மட்டக்களப்பு போதனா வைத்திய சாலைக்கு முன்பாக உள்ளது. இது சம்பந்தமாக நேரடியாகவே அல்லது தொலைபேசி மூலமாகவோ *(065 2226442)* தொடர்பு கொள்ளலாம்.

- தனித் தாய்ப்பாலூட்டலை ஊக்குவிக்கும் முகமாக தாய்ப்பாலூட்டல் முகாமைத்துவ நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இது 5ம் இலக்க விடுதிக்கு அருகில் அமைந்துள்ளது. இந்நிலையத்தில் தினமும் ஆலோசனைகளைப் பெற முடியும்.

மேலதிகமாக 24 மணிநேரமும் தொடர்புகொள்ளும் விதத்தில் தொலைபேசி வசதி *(Hot line)* ஏற்படுத்தப்பட்டுள்ளது. இலக்கம் **065 2227313**

தொகுப்பு
**P.நிரோஜினி**
மட்/ஆரையம்பதி மகா வித்தியாலயம்.
'சரஸ்வதி சிறுவர் கழகம்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் தினத்தில் உதித்த சிந்தனைகள் சில....

1. அன்பார்ந்த சகோதர சகோதரிகளே! சிறுவர்களாகிய எம்மைப் பாதுகாப்பது அனைவரதும் கடமையாகும். சிறுவர்கள் அன்புக்காக தம் தாய்மார்களிடம் ஏங்குவதை சில இடங்களில் நாம் பார்த்து வருகிறோம். அல்லது கேட்டு இருக்கிறோம். தயவுசெய்து பெற்றோர்களே! எமக்கு அன்பைத் தாருங்கள்.

2. சிறுவர்களாகிய எமக்கு அடிக்கிறார்கள். துன்புறுத்துகிறார்கள். படிக்க வைக்காமல் அடிமைப்படுத்துகிறார்கள். அதனால் சிறுவர்களின் மனம் பாதிக்கப்படுகிறது.

3. சிறுவர்களை அடிப்பமைப்படுத்துவதன் காரணம் என்னவென்று நமக்கு விளங்கவில்லை. சிறுவர்களை அடிமைப்படுத்துவன் மூலம் மனம் பாதிக்கப்படுகிறது. மனம் பாதிக்கப்படுவதினால் நோய், சமூகத்தின் ஒதுங்கி நடக்கும் தன்மை என்பன அவர்களிடத்தில் ஏற்படுகிறது. இதனால் சிறுவர்களை எங்கு அழைத்துச் சென்றாலும் அவர்களிடத்தில் அடிமைத்தனம் உண்டாகிறது.

4. சிறுவர்களது மனதில் படிக்க வேண்டும் என்ற எண்ணம் உண்டாகி இருக்கும். அதை பெற்றோரிடம் சொன்னால் அவர்களை மனம்நோக வைத்து அடிமைத் தனத்திற்கு அவர்களை உள்ளாக்கி வைக்கிறார்கள். இவர்களது அடிமை வாழ்விற்கு பெற்றோர்களும் ஒரு காரணம்.

5. சிறுவர்களை அடிமையாக்குவதன் மூலம் சில சிறுவர்கள் தற்கொலை செய்ய நாடுகிறார்கள்.

6. அன்பார்ந்த பெற்றோர்களே! தன் பிள்ளைகளிடத்தில் அன்பு வையுங்கள். அவர்களிடத்தில் அன்பாய் பேசுங்கள். தம் பிள்ளைகளை அடிமைப்படுத்தி தம் பிள்ளைக்கு மனநோய் ஏற்பட்ட பின்னர் ஏன் அடிமைப்படுத்தினேன் என்று யோசிக்காதீர்கள்.

7. அன்பார்ந்த பெற்றோர்களே! அறுதியும் இறுதியுமாக கூறுகிறோம். தம் பிள்ளைகளைப் படிக்க வையுங்கள். அவர்களை அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்றுக்கொடுங்கள்.



**M.N.M.றஸான்** – தரம் - 4,
மட்/ஒல்லிக்குளம், அல்ஹம்றா வித்தியாலயம்.
'மர்வா சிறுவர் கழகம்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறுகதை

# நல்ல நண்பன்

பீட்டர், டேவிட் இருவரும் ஒரே பள்ளியில் படிக்கும் நண்பர்கள் என்றாலும் இருவரும் ஒருவருக்கொருவர் முரண்பாடு உடையவர்கள். பீட்டர் அதிகமாகப் பொய் சொல்வான். சற்றும் யோசிக்காமல் அடுத்தவர் மேல் பழிபோடுவான். டேவிட் அதற்கு நேர் எதிரானவன். மிகுந்த நேர்மை மிக்கவன். உண்மையும் ஒழுக்கமும் அடுத்தவர் மேல் அன்பும் கொண்டவன்.

ஒருநாள் ஆசிரியர் வகுப்பறைக்குத் தாமதமாக வந்தார். இதனால் மாணவர்கள் வகுப்பறையில் விளையாடத் தொடங்கினர். பீட்டர் அங்கும் இங்குமாக ஓடி ஜன்னல் திரைச்சீலை மேல் விழுந்தான். இவன் விழுந்த வேகத்தில் திரைச்சீலை கிழிந்துவிட்டது. நண்பர்கள் இருவரும் நடுங்கிவிட்டனர். காரணம் இவர்களின் ஆசிரியர் மிகவும் கண்டிப்புமிக்கவர். நிச்சயம் தண்டிப்பார் பயத்தில் வகுப்பறையே அமைதியானது.

வகுப்பறைக்குள் நுழைந்த ஆசிரியர் மாணவர்கள் மிகவும் அமைதியாக, வழமைக்கு மாறாக இருப்பதைக் கவனித்தார். ஏதோ தவறு செய்துவிட்டார்கள் என்பதை ஊகித்துக்கொண்டார். அவர் வகுப்பறையைச் சுற்றிப்பார்த்த போது ஜன்னல் திரைச்சீலை கிழிந்து தொங்கியது. ஆசிரியர் அவதானித்ததைக் கண்ட பீட்டருக்கு முகம் பயத்தில் வெளிறிவிட்டது. ஆசிரியர் விசாரிக்கத் தொடங்கினார். டேவிற்றை விசாரித்தபோது தனது நண்பனுக்காக நான்தான் செய்தேன் என்று கூறினான். ஆசிரியர் அவனைப் பிரம்பால் அடித்து முழந்தாழில் இருத்தினார். சற்று நேரம் கழித்து, டேவிட்டை இவ்வாறு இனி மேல் செய்யாதே எனக் கூறி விடுவித்தார். அடிவாங்கிய வலியையும் பொருட்படுத்தாது தன் நண்பனைக் காப்பாற்றிவிட்டதாக மகிழ்ந்தான் டேவிட். தன் நண்பனின் நல்ல குணத்தைப் புரிந்துகொண்ட பீட்டர் அவனிடம் மன்னிப்புக் கேட்டு அழுதான். இருவரின் நட்பும் மேலும் ஆழமானது.

**உண்மை நண்பனை ஆபத்தில் அறியலாம்!**




க.அஸ்விதா
தரம் - 1,
மட்/ஆரையம்பதி சுப்பிரமணியம் வித்தியாலயம்.
'ஐயப்பன் சிறுவர் கழகம்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வெற்றியீட்டிய சித்திரங்கள்



சமூர்த்தி கெக்குழு போட்டியில் பிரதேச மட்டத்தில் முதலாம் இடம் பெற்றது.

**சு.முகிலன்** – தரம் - $7^K$,

மட்/கிரான்குளம் விநாயகர் மகா வித்தியாலயம்.




**MF.மிப்றா** – தரம் - 12,

மட்/பாலமுனை அலிகார் மகா வித்தியாலயம்.



**MF.முபா** – தரம் - 3,

மட்/காங்கேயனோடை இக்றா வித்தியாலயம், ஆரையம்பதி.



**G.சபீக்கா** – தரம் - 11,

மட்/ஒல்லிக்குளம் அல்ஹம்றா வித்தியாலயம்



**M.S.Fஹௌஜா** – தரம் - 3,

மட்/ காங்கேயனோடை இக்றா வித்தியாலயம், ஆரையம்பதி.



**யோ.சுபாஸ்காந்** – தரம் - $7^K$,

மட்/கிரான்குளம் விநாயகர் மகா வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாடம் புகட்டிய துறவி

(ஒருபக்கச் சிறுகதை)

ஒரு நாட்டு அரசனுக்கு பழமையான மண்ணாலான பொருட்களை சேர்த்து வைப்பது பொழுதுபோக்காக இருந்தது. அப்பொருட்களையெல்லாம் பிறநாட்டு அரச விருந்தினர்கள் வரும்போதெல்லாம் காட்டி பெருமை சேர்த்துக்கொண்டான்.

பல நாட்கள் கடந்த நிலையில் அம் மட்பாண்டங்கள் தூசு படிந்திருந்ததைக் கண்ட அரசன், வேலையாள் ஒருவனை அழைத்து, அவற்றில் படிந்திருந்த தூசிகளை துடைத்துவிடும் படி கட்டளையிட்டான். அவ்வேலையாள் தூசி துடைக்கும்போது தவறுதலாக ஒன்று விழுந்து உடைந்துவிட்டது.

இதைக் கண்ட அரசன் கடுங்கோபங் கொண்டு, அவ்வேலையாளுக்கு மரண தண்டனை வழங்க வேண்டுமெனக் கட்டளையிட்டு அவன்ன உடனடியாக சிறைச்சாலையில் அடைப்பதற்கு உத்தரவு பிறப்பித்தான்.

அந்த நகருக்கு வந்த துறவி ஒருவருக்கு இவ்விடயம் எட்டியது. ஒரு மண்ணாலான பொருள் உடைந்ததற்கு மரண தண்டனையா? என நினைத்த துறவி அரசனுக்கு தகுந்த பாடம் புகட்ட எண்ணினார்.

துறவி அரசனிடம் வந்து, உடைந்த மட்பாண்டத்தையும், ஏனைய பொருட்கள் இருக்குமிடத்தையும் காட்டினால், உடைந்ததை மிக நேர்த்தியான முறையில் ஒட்டி ஏனையவற்றுடன் அழகாக வைப்பதாக உறுதியளித்தார். இதைக் கேட்ட அரசன் மிகவும் மகிழ்வுடன் பொருட்கள் இருந்த அறைக்குக் கூட்டிச் சென்று காட்டினான்.

துறவி உடைந்ததையும் உடையாமல் இருந்தவைகளையும் மௌனமாக பார்வையிட்டுக் கொண்டிருந்தார். திடீரென பக்கத்தில் கிடைத்த தடியொன்றை எடுத்து, உடைத்து அடித்து சுக்கு நூறாக்கினார்.

இதைக் கண்ட அரசனுக்கு ஆவேசம் உண்டானது. துறவியைப் பார்த்து "ஏன் இப்படிச் செய்தீர்?" என கோபத்துடன் கேட்டான்.

துறவி பொறுமையுடனும் நிதானத்துடனும் சொல்லத் தொடங்கினார். "அரசே! ஒரு மட்பாண்டம் உடைந்ததற்க ஒருவருக்கு மரண தண்டனை வழங்கிய நீங்கள் இங்குள்ள பல நூறு மட்பாண்டங்கள் ஒவ்வொன்றாக உடையும்போது பலநூறு பேருக்கு மரண தண்டனை கொடுப்பதைவிட நான் ஒருவன் மரண தண்டனை பெறுவது சாலச்சிறந்ததல்லவா?" என்றார். அரசன் தனது செயலுக்காக வெட்கித் தலைகுனிந்து வேலையாளை விடுதலை செய்தான்.

**இ.மிருயாழினி**
(தரம் - 10),
மட்/கிரான்குளம் விநாயகர் மகா வித்தியாலயம்.
'கருணா சிறுவர் கழகம்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறு கவிதைகள்

## பள்ளிப்பருவம்




வெள்ளை உடையினிலே
துள்ளித் திரிந்த - அந்தப்
பள்ளிப் பருவ வாழ்க்கை
மீண்டும் வந்திடுமா?

## காக்கை



பாட்டி சுட்ட பாலப்பம்
பார்க்கப் பார்க்க வாயூறும்
நீட்டி ஒன்றத் தந்திடுவாள்
நீட்டாமல் இரண்டை
எடுத்திடுவேன்.

## மல்லிகை



குண்டு குண்டு மல்லிகையாம்
குமரன் தோட்டத்து மல்லிகையாம்
வண்டு வந்து வயிறு நிறைய
உண்டு தேனை உறங்கிடுமாம்.

## தந்திரம்

எங்கள் வீட்டு மாமரத்தின்
எங்கும் காக்கை
கூடுகட்டும்
தருணம் பார்த்து கோகிலங்கள்
தந்திரமாய் முட்டையிடும்.

## ஏமாற்றம்




பாட்டி சுட்ட பருப்பு வடை
பாப்பா எடுத்துத்
தின்றாளாம்
காத்திருந்த காக்கை அதை
கௌவிக் கொண்டு
சென்றதுவாம்!

**லோ.கவிஷ்னா**
தரம் - 02,
மட்/ஆரையம்பதி சுப்பிரமணியம்
வித்தியாலயம்.
'விவேகானந்தர் சிறுவர் கழகம்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுதாயத்தை இருளுக்குள் தள்ளும் தொலைக்காட்சி நெடுந்தொடர்கள்



காலையில் 'அழுது'கொண்டே தொடங்கும் பெண்களின் வாழ்க்கை இரவு உறங்கும் வரையும் முடிவதில்லை. அந்த அளவிற்கு தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படும் நெடுந்தொடர்கள் பெண்களைக் கட்டிப்போட்டு, இல்லை இல்லை அடிமையாக்கி வைத்திருக்கிறது.

தொலைக்காட்சிக்கு அடிமையானவர்கள் போதைப்பொருள்களுக்கும் அடிமையானவர்கள் போன்றுதான் நடந்துகொள்கிறார்கள். ஆனால் தொலைக்காட்சியானது போதைப்பொருளை விட கொடூரமானது என்று கண்டறியப்பட்டுள்ளது. மனிதனின் மனதை பாழாக்கி வன்முறை மீது நாட்டம் கொள்ள வைத்து நாட்டையும், சமுதாயத்தையும் அது சீரழிக்கின்றது.

தொலைக்காட்சியானது வளர்ந்துவரும் தலைமுறையினர் மனநிலையை மட்டுமின்றி உடல் நலனையும் வெகுவாகப் பாதிக்கின்றது என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அமெரிக்காவில் எடுத்த கணக்கெடுப்பு ஒன்றின்படி ஒரு குழந்தை ஒவ்வொரு வாரமும் சராசரியாக 1680 நிமிடங்கள் தொலைக்காட்சியைப் பார்ப்பதில் செலவழிக்கின்றது. ஆனால் தன் பெற்றோருடன் பயனுள்ள விடயங்களைப் பேச வெறும் 40 நிமிடங்கள் மட்டுமே செலவிடுவதாக ஆய்வு தெரிவிக்கிறது. ஆண்டொன்றுக்கு 900 மணி நேரத்தைச் சிறுவர்கள் பாடசாலைகளில் கழிக்கின்றனர். ஆனால் அவர்கள் 1023 மணி நேரங்கள் தொலைக்காட்சிக்கு முன்பு செலவிடுகின்றனர். உயர் நிலைப் பள்ளியை முடிக்கும் முன்பு 19 ஆயிரம் மணிநேரத்தை அவர்கள் தொலைக்காட்சிக்கு முன்பு செலவிடுவதாக அந்தப் புள்ளிவிபரம் தெரிவிக்கிறது.

## இதயநோய் ஆபத்து

அளவுக்கதிகமாக தொலைக்காட்சி பாரப்பதால் பாடசாலை மாணவர்களால் குறைந்தபட்ச அளவு உடற்பயிற்சி மற்றும் விளையாட்டுக்களில் கூட ஈடுபட முடியவில்லை. தொலைக்காட்சிப் பெட்டியின் முன் தவம் கிடக்கும் 5 வயதிலிருந்து 8 வயதுக் குழந்தைகளுக்கு இதய நோய்களில் ஏதாவது ஒன்று தாக்கப்படும் அபாயம் இருப்பதாகவும் கண்டறியப்பட்டுள்ளன.

1960களில் இருந்த தொகையைவிட 1990களில் மிதமிஞ்சிய உடல் பருமன் கொண்ட குழந்தைகளின் எண்ணிக்கை இரு மடங்கு அதிகரிப்பதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதற்கு உடல் ரீதியாக எவ்வித நடவடிக்கைகளில் ஈடுபடாமலும் தொலைக்காட்சிப் பெட்டிகளின் முன் முடங்கிக் கிடப்பது தான் முக்கிய காரணம் என மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

## பாதிக்கும் வன்முறை காட்சிகள்

18 வயதை அடைவதற்குள் ஒரு சிறுவன் தொலைக்காட்சி வழியாக இரண்டு இலட்சம் வன்முறைக் காட்சிகள் பார்த்து வருவதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. சராசரியாக ஒரு குழந்தை 11 வயதை அடைவதற்குள் 8,000 கொலைகளையும் 10,000 வன்முறைகளையும் தொலைக்காட்சி வழியே பார்க்க நேரிடுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அமெரிக்காவில் 36,000 பள்ளிகளில் நடத்தப்பட்ட ஆய்வுகளின்படி வன்முறையை தொலைக்காட்சியில் பார்ப்பதற்கும், செயலில் இறங்குவதற்கும் நெருங்கி தொடர்பு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைக்காட்சியைப் பார்க்கும் சிறுவர்கள் தாங்கள் பார்க்கும் ஒவ்வொரு காட்சியையும் தமது ஆழ் மனதில் உள்வாங்கிக் கொள்கிறார்கள் என்றும் இதனடிப்படையில் அவர்கள் செயல்களில் இறங்குவதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

நிஜத்திற்கும் நிழலுக்கும் இடையே எவ்வித வேறுபாட்டையும் இவர்களால் காணமுடிவதில்லை என்றும், தொலைக்காட்சி ஏற்படுத்திய பாதிப்புக்களால் வாழ்க்கை பயங்கரமானதாகவும் இருள் சூழ்ந்ததாகவும், கவலைக்குரியதாகவும் ஆகிவிடுவதாக பெருவாரியான குழந்தைகள் கருதுவதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

**தவறான முன்னுதாரணம்**

பெரியவர்கள் சண்டை போட்டுக்கொள்வதையும், மனமுடைந்து கண்ணீர் விடுதல், கொலை, பாலியல் உறவு கொள்வது மற்றும் வன்முறைகள் போன்றவற்றைக் குழந்தைகள் தொலைக்காட்சிகளில் காண்கிறார்கள். பெரியவர்களின் பொறுப்பற்ற ஒழுக்கக்கேடான வாழ்க்கைகளை தொலைக்காட்சியில் மீண்டும் மீண்டும் பார்க்கும் குழந்தைகள் அவர்களை தவறுகளுக்கு முன்னுதாரணமாக்குகிறார்கள். தொலைக்காட்சியில் சித்திரிக்கப்படும் போலியான நிகழ்வுகள் உண்மையான வாழ்வில் நடப்புகளாக பசுமரத்து ஆணி பால பிஞ்சு நெஞ்சங்களில் பதிவாகின்றன. இதனால் குழந்தைகள் தங்களின் கள்ளம் கபடமற்ற தன்மையை இழக்கின்றனர். அவர்களின் எதிர்காலம் பாழ்படும் அளவிற்கு தொலைக்காட்சி வழியே நஞ்சு விதைகள் விதைக்கப்படுகின்றன என்று ஆய்வுகளும் கணக்கெடுப்புக் களும் தெரிவிக்கின்றன.

**AF.நுஷ்ரா**
மட்/பாலமுனை அலிகார் மகா வித்தியாயலம்.
'இர்ஷாத் சிறுவர் கழகம்'

## ஆசைகள்



வெட்டை வழி நிலவின் சந்நிதியில்
அன்னையின் அரவணைப்பில் உண்டிட ஆசை...
கைகோர்த்து கடற்கரை மணல் மீது
என் தந்தையொடு நடை பயில ஆசை...

பல்விழுந்த வாயில் புன்னகை தவழ
பள்ளி நாடி அறிவு தேட ஆசை...
இளமைக் கனவுகளை கயிறாய் திரித்து
தோழரோடு உயிராய் இருந்திட ஆசை...

பிஞ்சுக் கையில் பென்சில் பிடித்து எழுதிட
பயிற்றுவிக்கும் ஆசானிடம் அளவளாவ ஆசை...
மாலை மங்கும் வேளை விளையாட்டுத் திடலில்
மனம் மகிழ்ந்து ஓடி ஆடி விளையாட ஆசை...

இன்னும் எழுத்தில் வடிக்கவொண்ணா ஆசைகள்
மின்னும் என் நெஞ்சாங் கூட்டறையில் என்று
இன்னும் உணர்ந்திடவில்லை போலும்
வெளிநாட்டிலுள்ள என் பெற்றோருக்கு...


**ஃ.ம.பா.மர்ஷுதா**
தரம் - 9,
மட்/ஒல்லிக்குளம், அல்ஹம்றா
வித்தியாலயம்.
'மர்வா சிறுவர் கழகம்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரண்பாட்டு முகாமைத்துவம்

முரண்பாடு என்பது தனி மனிதன் இன்னுமொரு மனிதனிடத்தோ அல்லது ஒரு குழுவினரிடத்தோ தொடர்பினை ஏற் படுத்தும் போது இவர்களின் நோக்கங்கள் வேறுப டும் ஒரு எதிர்ப்பாகும் சந்தர்ப்பம் முரண்பாடு ஆகின்றது. இதன் அடிப்படை யில் பார்க்கும் போது ஒவ்வாத இலக்கு களை கொண்டவர்களுக்கிடையிலான எதிர்ப்பு முரண்பாடாகக் கொள்ளலாம். சமூகத்தில் வாழ்கின்ற நாம் எமது தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படும் போது பிரச்சினைகளை சந்திக்க வேண்டியுள்ளது.



இதுவே முரண் பாடாக வெளிப்பட்டு நிற் கின்றது.

சாதாரணமாக பார்க்கும் போது ஒவ் வொரு மனிதனும் ஒவ்வொரு விதமாக மற் றவர்களிடம் நல்லுறவை பேணி வருகின் றான். இந்த உறவை அவன் பேணி வரு வதற்குக் காரணம் இவனால் எமக்கு எப்போ தாவது உதவி கிடைக்கும் என்ற சுயநலம். இந்த சுயநலம் உள்ள மனிதர்களிடையில் முரண்பாடு ஏற்படுவது சகஜம். அதாவது சுயநலத்தால் உறவுகொள்ளும் வேளையில் எப்போதாவது இவர்களின் இலக்கு வித்தி யாசப்படும் சந்தர்ப்பம் ஏற்படும். அவ்வாறு ஏற்படாவிடின் இங்கு முரண்பாடு ஏற்படு வதை எதிர்பார்க்க முடியாது. இலக்கு வித்தியாசப்படுமாயின் இவர்களின் நல்லு றவு முறியடிக்கப்படும். கருத்து எதிர்ப்பு ஏற்படும். இதுவே முரண்பாடாக கொள்ளப் படுகிறது.

எந்தவொரு முரண்பாடாக இருந்தா லும் ஒரு சமூகத்தின் சமூக, பொருளாதார, கலாசார, அரசியல் மனித நடத்தை போன்ற வற்றை அடிப்படையாகக் கொண்டே முரண் பாடு எழுகின்றன. அதாவது சமூகக் காரணியை எடுத்து நோக்கும் போது ஒரு சமூகத்தில் பலவிதமான மக்கள் வாழ்கின்றார்கள். பணக் காரர், ஏழைகள் என்ற பாகுபாடு அநேகமான சமூகத்திலிருந்து வருகின்றது. எந்தவொரு சமூகத்திலும் அனைத்து மக்களும் பணக்கா ரர்களாக இருப்பதில்லை. ஏழைகளும் இருந்தே வருகின்றனர். இதனால் பணக்கா ரர் எனும் உயர்ந்த வர்க்கத்தினர் தாழ்ந்த வர்க்கத்தினரை அடக்கி ஆழ முற்படுகின் றனர். இதனால் முரண் பாடு ஏற்படுகின்றது.

அரசியல் மனித நடத் தையும் முரண் பாடு எழுவதற்கு காரணமாய் அமைந்துவிடுகிறது.

இவ்வாறாக, சமூக, பொருளாதார, கலாசார, அரசியல், மனித நடத்தை என்பன அடிப்படையான காரணியாக அமைந்து விடுகின்றன. இவ் முரண்பாட்டை எவ்வாறு நிவர்த்தி செய்யலாம்? அல்லது இல்லாமல் செய்யலாம்? எனும் கேள்வியை நாம் கேட்குமிடத்து முரண்பாட்டை சரியான முகாமைத்துவப்படுத்துவதன் மூலமும் முரண் பாட்டிற்கான சரியான தீர்வை முன்வைப்பதன் மூலமும் இவற்றை இல்லாமல் செய்யலாம் என்பது உறுதியான விடயமாக அமைந்து விடுகின்றது. எந்தவொரு பிரச்சினையோ அல்லது முரண்பாடோ அதை நாம் இலகு வாகவோ சகஜமகவோ நோக்க வேண்டும். இது பெரும்பாலும் சிறிய அளவிலான முரண்பாட்டிற்கே பொருத்தமானதாய் அமையும். அதாவது நாம் எந்தப் பிரச்சி னையையும் உடனே தீர்த்துக்கொள்ளக் கூடியவர்களாய் இருக்க வேண்டும்.

மேலும் முரண்பாடு சிறியதாக இருக் கின்ற போதோ அல்லது முரண்பாடு வளர் வதற்கு முன்போ அதை அறிந்து அதற்கான தீர்வை முன்வைப்பது சிறந்த ஒரு விடயமா கும். அதாவது "வெள்ளம் வருமுன் அணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்ட வேண்டும்" என்ற கருத்தையே இது சுட்டிக்காட்டுகிறது. முரண்பாட்டிற்கான தீர்வை எடுக்க நீண்ட காலம் செல்லும் என்ற எண்ணம் இல்லாமல் உடனே தீர்வுகாண வேண்டும். என்ற எண்ணம் இருந்தால்முரண் பாட்டை முளையிலேயே கிள்ளி எறிந்து விட லாம். மேலும் தனிப்பட்ட மனிதனின் முரண் பாட்டை அவனது எண்ணங்கள் உணர்வுகள் என்பவற்றை மாற்ற முற்படுவதன் மூலம் தீர்த் துக்கொள்ள முடியும். அதாவது விட்டுக்கொ டுப்பும் புரிந்துணர்வும் ஒவ்வொரு மனித உள்ளங்களிலும் காணப்படுமாயின், முரண் பாட்டை சுகமான முறையில் தீர்த்து சுக வாழ்வு நிறைந்த சமூகத்தைக் கட்டியெ ழுப்ப முடியும்.

எது எவ்வாறாக இருப்பினும் முரண் பாட்டை எவ்வாறு தீர்க்கலாம் என்ற எண் ணம் ஒவ்வொரு மனிதனது உள்ளத்திலும் தோன்ற வேண்டும். ஏன் என்றால் முரண்பா டுகள் அனைத்தும் சமூகத்தில் வாழ்கின்ற மனித னிடத்தில் இருந்தே பிறக்கின்றது. ஆகவே, ஒவ்வொரு மனிதனும் முரண்பாட்டை எவ் வாறு தீர்க்கலாம் என்று சிந்திக்க வேண் டும். அவ்வாறு சிந்திப்பதன் மூலம் முரண் பாட்டிற்கான தீர்வை இன்ங்காணலாம். மேலும் அனைவரும் ஒற்றுமை யாகவும் சந்தோஷமாகவும் வாழவேண்டும். சமூகத்தில் வாழ பிறவி எடுத்த ஒவ்வொரு மனிதனும் கூடி வாழவேண்டும். "ஒன்றுபட்டால் கோடி நன்மை" என்று நாம் இருக்க வேண்டுமே தவிர, முரண்பாட்டு கோடி உயிரை இழப் பவர்களாக இருக்கக் கூடாது. ஆகவே ஒற் றுமையுடன் இருந்தால் முரண்பாட்டிற்கான தீர்வை நாம் பெற்றுக்கொள்ளலாம்.

இவ்வாறாக முரண்பாட்டு முகாமைத் துவம் மற்றும் முரண்பாட்டு தீர்வு திறன்க ளினை வளர்த்துக்கொண்டால் சுகவாழ்வு நிறைந்த அதாவது எதுவித முரண்பாடும் அல் லாத சமாதானமான ஒற்றுமையான சமூகத் தைக் கட்டியெழுப்பி வாழலாம்.

பூ.வனிதா - (தரம் - 13.)
மட்/புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலயம்.
'விபுலானந்தர் சிறுவர் கழகம்'

# இலங்கையின் சிறப்புக்களும் அமைவிடங்களும்

| | சிறப்பு | அமைவிடங்கள் |
|---|---|---|
| 01. | சிறந்த தாவர பூந்தோட்டங்கள் | ஹக்கல, பேராதனை, கம்பஹா |
| 02. | விலங்கின காட்சியகம் | தெகிவளை |
| 03. | பீங்கான் தொழிற்சாலை | நீர்கொழும்பு, பிலியந்தலை |
| 04. | நிலக்கரி | முத்துராஜவேவ |
| 05. | உருக்குத் தொழிற்சாலை | ஹோமாகம |
| 06. | சர்வதேச விமான நிலையம் | கட்டுநாயக்கா |
| 07. | இயற்கைத் துறைமுகம் | திருகோணமலை |
| 08. | ரயர் தொழிற்சாலை | களணி |
| 09. | அதிகூடிய உஷ்ணப் பிரதேசம் | அந்பாந்தோட்டை |
| 10. | முத்துக்குளிப்பு | மன்னார் |
| 11. | கடற்கோட்டை | ஊர்காவற்துறை |
| 12. | பாடும் மீன்கள் | மட்டக்களப்பு |
| 13. | கூடிய மழைவீழ்ச்சி | வட்டவளை |
| 14. | அதி குளிர்ப்பிரதேசம் | கந்தப்பளை |
| 15. | இயற்கை கடல்குடா | பாசிக்குடா (மட்டக்களப்பு) |
| 16. | பெரிய தீவுகள் | ஊர்காவற்துறை, நெடுந்தீவு |
| 17. | கண்ணாடித் தொழிற்சாலை | நாத்தாண்டியா, கந்தானை |
| 18. | மா அரைக்கும் ஆலை | முகத்துவாரம் (கொழும்பு) |
| 19. | சப்பாத்துத் தொழிற்சாலை | மட்டக்குளி |
| 20. | எண்ணெய்க் கொழுப்பு ஆலை | சீதுவை |

சா.தரணியா – தரம் - 7V.
மட்/கிரான்குளம் விநாயகர் மகா வித்தியாலயம் 'கருணா சிறுவர் கழகம்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு விடை தரும் இரு வினாக்கள்



01. அறிவு வளர்வது நூலாலே
ஆடை நெய்வதும் நூலாலே

02. அணிலுக்கு அழகு வரியாலே.
அரசுக்கு வருவாய் வரியாலே.

03. யானையின் வலிமையான உறுப்பு துதிக்கை
ஆண்டவனின் அருளுக்கு துடுப்பும் துதிக்கை.

04. காலில்லாதவன் நடப்பது மரக்காலாலே.
நெல்லை அளப்பதும் மரக்காலாலே.

05. மழை வருமுன் வானில் கேட்கும் சத்தம் இடிப்பதாலே [இடியாலே]
அரிசி மாவாவதும் இடிப்பதாலே... [இடியாலே]

**T. பிரக்சீதா** (தரம் - 02).
மட்/ஆரையம்பதி சுப்பிரமணியம் வித்தியாலயம்.
'காந்த் சிறுவர் கழகம்'

## நாடுகளின் / இடங்களின் சிறப்புப் பெயர்கள்

இலங்கை - இந்து சமுத்திரத்தின் முத்து

துருக்கி - ஐரோப்பாவின் நோயாளி

ஜப்பான் - சூரிய உதய நாடு

பம்பாய் - இந்தியாவின் வாசல்

குவாங்கோநதி - சீனாவின் துயரம்

பாலஸ்தீனம் - புனித நாடு

ஆபிரிக்கா - இருண்ட கண்டம்

சுவிற்சிலாந்து - ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம்

பின்லாந்து - ஆயிரம் வாவி நாடு

**இ.சஜீபவன் - (தரம் - 6V).**
மட்/கிரான்குளம் விநாயகர் மகா வித்தியாலயம்.
'விநாயகர் சிறுவர் கழகம்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பரீட்சைக்குத் தயாராகுதல்

**PREPARE TO TEST**

கல்வி ரீதியாக பிள்ளைகள் முகங்கொடுக்கின்ற பல சவாலாக பரீட்சையில் சித்தியடைவதைக் குறிப்பிட முடியும். பரீட்சை தொடங்கும் போது பெரும்பான்மையான பிள்ளைகள் பல்வேறு உடல், உள பிரச்சினைகளுக்கு முகங் கொடுக்கின்றனர்.

அவற்றில் சில கீழ்வருமாறு,

- தூக்கமின்மை
- பசியை உணராமை
- தலைவலி
- கோபம் ஏற்படல்
- பய உணர்வு
- கவலை
- மறதி
- நகம் கடித்தல்
- அவதானம் குறைந்து போதல்
- குழப்ப நிலை

குறிப்பாக இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படக் காரணம், பரீட்சைக்கு எவ்வாறு முகங் கொடுப்பது என்பது பற்றி ஒரு வகையான பதகளிப்பு மனோநிலை ஏற்படுவதே காரணமாகும்.

இந்த நிலையை உளவியலில் பரீட்சை பதகளிப்பு (Test Anxiety) என அழைக்கின்றனர். பரீட்சை பயம்/ பதகளிப்பு ஏற்படுத்துவதற்கான சில காரணங்களைக் கீழே தருகிறோம்.

- பரீட்சையில் தோல்வியடையலாம் என்ற பயம்.
- பெற்றோர், ஆசிரியர்கள், நண்பர்களின் மிகை எதிர்ப்பினால் ஏற்படும் அழுத்தம்.
- கடந்தகால பரீட்சைகளில் சிறந்த முறையில் முகங்கொடுக்க முடியாமல் இருந்தமை.
- முன் ஆயத்தம் இல்லாமை.
- பாடவேலைகளை சரியாகப் பூரணப்படுத்தாமை.

இதன்படி பரீட்சைக்குத் தயாராகுவதென்பது ஒரு திறன் ஆகும். பரீட்சை நாள் வரும் வரை எதிர்பார்த்துக்கொண்டிருக்காமல் நேர காலத்தோடு தயாராக வேண்டும். ஏனென்றால் அவசரமாக செய்யும் வேலைகளால் நல்ல விளைவுகளை எதிர்பார்க்க முடியாது. சில பிள்ளைகள் பரீட்சைக்கு முந்தியநாள் இரவில் விழித்துப் படிக்கின்றனர். அது நல்லதொரு செயல் அல்ல. மிகப் பொருத்தமாக அமைவது பரீட்சைக்கு முந்திய நாள் சிறந்த முறையில் நித்திரை செய்வதாகும். நேரகாலத்தோடு தயாராகினால் கடைசி நேரத்தில் கஷ்டப்படவேண்டிய அவசியம் இருக்காது.

அதனால் கற்கும் பிள்ளைகளுக்கு நல்ல கற்றல் பழக்கங்களை விருத்தி செய்துகொள்ள பயிற்சிக்க வேண்டும். குறிப்பாக பரீட்சை எழுது முன்னர் கடந்தகால வினாத்தாள்களை சுயமாக விடை எழுதி ஆசிரியரிடம் காட்டி மதிப்பீட்டைப் பெற்றுக்கொள்ளலாம். அவ்வாறே பரீட்சை பதகளிப்பை போக்கிக்கொள்ளவும் உதவியாக அமையும்.

வகுப்பில் ஆசிரியரால் வழங்கப்படும் பயிற்சிகள், ஒப்படைகளைப் பிற்படுத்தாமல் குறிப்பிட்ட நாளிலேயே செய்வதற்குப் பழக வேண்டும். நண்பர்களோடு சேர்ந்து பாடத்தைக் கலந்துரையாடுவதன் மூலம் தனக்கு விளங்காத விடயங்களை விளங்கிக்கொள்வதற்கும், தனக்குத் தெரிந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றை மேலும் நன்றாக விளங்கிக்கொள்வ தற்கும் சந்தர்ப்பம் கிடைக்கிறது.

அவ்வாறே தனது திறமைகள், ஆற்றல்கள் மற்றும் எல்லைகள் பற்றிய ஓர் சுய மதிப்பீட் டைச் செய்து பலவீனங்களை நீக்கிக்கொள்ள முயற்சிக்க வேண்டும். எவ்வாறிருப்பினும் பரீட் சைக்கு சிறந்த முறையில் முகங்கொடுப்பதற் கான கீழ்வரும் விடயங்களில் உமது கவனத்தை செலுத்தவும். அதனால் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ள முடியுமாகலாம்.

- ❊ பரீட்சைக்கு முந்திய நாள் இரவில் நன் றாக நித்திரைகொள்ளவும்.
- ❊ பரீட்சைக்கு சமூகமளிக்கும் முன் போஷாக் குள்ள எளிய உணவைப் புசிக்கவும்.
- ❊ பரீட்சை தொடங்குவதற்கு அரை மணித்தி யாலத்திற்கு முன்னராவது பரீட்சை நிலை யத்திற்கு செல்லவும்.
- ❊ தனது கதிரையில் அமர்ந்து மெதுவாகக் கண்களை மூடவும். பல தடவை ஆழமாக மூச்சு எடுக்கவும்.
- ❊ சிறிது நேரத்திற்குப் பின்னர் தான் விரும் பும் மகிழ்ச்சி தரும் ஒன்றை நினையுங் கள். சில வினாடிகள் சாந்தமாக இருங்கள்.
- ❊ இன்னும் சில வினாடிகள் மெதுவாக சாதா ரண நிலையில் மூச்சு எடுக்கவும்.
- ❊ சிறிது நேரத்திற்குப் பின்னர் தான் விரும் பும் மகிழ்ச்சிதரும் ஒன்றை நினையுங்கள். சில வினாடிகள் சாந்தமாக இருங்கள்.
- ❊ இன்னும் சில வினாடிகள் மெதுவாக சாதா ரண நிலையில் மூச்சு எடுக்கவும். பல தட வைகள் மனதில் சொல்லிக்கொள்ளவும்.

**"பரீட்சை எனக்கு இலகுவான ஓர் இலக்கா கும். இன்று நான் நன்றாக விடை எழுது கிறேன். அதனை என்னால் செய்ய முடியும்"**


இப்போது உனக்குப் பரீட்சை பற்றிய நல்ல தனத் தயாரிப்பு உள்ளது. அதனால் உறுதி யாக பரீட்சை உமக்கு ஓர் இலகுவான இலக் காக மாறும்.

என்றாலும் ஒரு கேள்வித் தாளிற்கு விடை எழுதி விட்டு பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே வந்த பின் எழுதிய விடை பற்றி சரியா, பிழையா என பார்ப்பதில் காலத்தைக் கழிக்க வேண்டாம். சிலநேரம் தான் எழுதிய விடை பிழை எனத் தெரிந்தால் அதனால் மனதில் ஒருவித கவலை ஏற்பட வாய்ப்புண்டு. அது அடுத்த வினாத்தாள்களுக்கு விடை அளிப்பதைப் பாதிக்கலாம்.

அதனால் நீங்கள் செய்ய வேண்டிய எழு திய விடையைப் பற்றி யோசித்து நேரத்தை வீணடிக்காமல் அடுத்த வினாத்தாளுக்காக தயாராக வேண்டும். தேவைப்படின் பரீட்சை பூரணமாக முடிந்தபின்னர் பரீட்சையைத் தான் எதிர்கொண்ட முறை பற்றி யோசித்து குறை பாடுகள் இருந்தால் அவற்றைத் தவிர்த்துக் கொள்ள முயற்சிக்கலாம்.

**Mapping Notes**

பரீட்சை சித்தியடைதல்




**T.மிருஜி**
மட்/ஆரையம்பதி மகா வித்தியாலயம்.
' சக்தி சிறுவர் கழகம் '



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களைப் பறக்க விடுங்கள்

சுற்றித்திரிய ஆசை
சுழன்று ஆட ஆசை
பள்ளி செல்லும் போது
பாங்காய் திரிய ஆசை

சைக்கிள் ஓட ஆசை
சவாரி செய்ய ஆசை
சட்டி சாமான் வாங்கி
சமையல் பண்ண ஆசை

விரும்பித் தேடி உன்னை
விதிப்பர் பல தடைகள்
ஆசைகளை அடக்கி
அடியில் போட்டு மிதிப்பர்

சிறுவர் என்று கூறி
சிறப்பாய் கூறும் கருத்தை
செவியில் கேட்ட மறந்து
காலில் போட்டு மிதிப்பார்

கட்டுப்பாடு போட்டு
கடமை என்று கூறி
பெரியோர் என்று பலரும்
பெற்றோர் என்று சிலரும்
செட்டைதனை வெட்டி
சிறகடிக்க விடாமல்
எங்கள் சிந்தனை முடக்கி
சிறை படுத்தி வைப்பர்

கூட்டை உடைத்து நாங்கள்
கூவித் திரிய
சிந்தனை என்ற வீச்சால்
சிறை உடைப்போம் ஒருநாள்!

**ம.பவதாரணி**
மட்/கிரான்குளம் சரஸ்வதி
வித்தியாலயம்.
'விஷ்ணு சிறுவர் கழகம்'



# புகைத்தல்

பள்ளி செல்லும் பிள்ளையே
புகைத்தல் பற்றி அறிந்து கொள்

புகைத்தலினால் இருதயக் கோளாறும்
பக்கவாத நோய்களும் ஏற்படும்.

புற்றுநோயும் வந்திடும்
உயிரும் பறந்து போய்விடும்

புகைப்பவர் அருகில் நின்றாலும்
உனக்கேதான் - கேடு

ஆதலால் புகைப்பவரைக் கண்டால்
நீ தூரே சென்றிடு

அதனால் ஏற்படும் ஆபத்தை
நீயும் மற்றவர்களுக்கே விளக்கிடு.

**வி.அஸ்திக்கா**
தரம் - 1,
மட்/நவிரெட்னராசா வித்தியாலயம்.
'சரஸ்வதி சிறுவர் கழகம்'

# ஆசான்கள்



அறிவொளி புகட்டிவிடும் ஆசான்களே
அருமையான வழி காட்டிடுவீர்கள் – 2
அன்பு வலையில் எமை அடைத்து
அழகு தமிழ் பயிற்றிடுவீர்கள்
[அறிவொளி....]

ஆர்வமுடன் நாம் கல்வி பயின்றிடவே
ஆன்மீக வழியில் நாம் சென்றிடவே
ஆறாத சினங்கொண்டு ஆத்திரப்பட்டாலும்
அமைதியான வழி காட்டுவீர்கள்
[அறிவொளி....]

இன்பமுடன் பள்ளி சென்றிடவும்
இனிமையாக நாம் பேசிடவும்
இரக்கமுடன் எல்லோரிடமும் பழகிடவும்
இதமான வழி காட்டிடுவீர்கள்
அறிவொளி புகட்டிவிடும் ஆசான்களே
அருமையான வழி காட்டிடுவீர்கள்
[அறிவொளி....]

**க.ஜனகன் – (தரம் - 4B),**
மட்/கிரான்குளம் சரஸ்வதி வித்தியாலயம்.
'விநாயகர் சிறுவர் கழகம்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுள் எங்கே இருக்கிறார்?



ஆன்மீக குரு ஒருவரிடம் அவரது சீடன், "கடவுள் எங்கே இருக்கிறார்?" என்றான். எல்லோரிடத்திலும் எல்லா இடத்திலும் எங்கும் கடவுள் இருக்கிறார்" என்றார் குரு. "அப்படியா!" என்றான். சீடன் குருவிடம் சொல்லி விட்டு வீட்டுக்குக் கிளம்பினான்.

வழியில் யானை ஒன்று அவனை நோக்கி வேகமாக வந்துகொண்டிருந்தது. அதைப் பார்த்ததும் யானையின் மீது அமர்ந்திருந்த பாகன் "ஏய் ஒதுங்கிப் போ... வழிவிடு" என்று அலறினான். அப்போதும் சீடன் நகரவில்லை. "யார் இவன் பைத்தியகாரனாக இருப்பான் போலிருக்கிறதே" என பாகன் முணுமுணுத்தான். ஆனால் சீடனின் சிந்தனையோ வேறு மாதிரியாக இருந்தது. "கடவுள் தான் எங்கும் இருக்கிறாரே! யானையிடமும் இருக்கிறார். என்னிடமும் இருக்கிறார். அப்படியென்றால் கடவுள் என்னைப்போய் தாக்குவாரா? ஆகவே இந்த யானை நிச்சயம் என்னைத் தாக்காது" இவ்வாறு நினைத்துக் கொண்டே நகராமல் நடுவழியில் நின்றுகொண்டான். யானை வந்தது. அவன் முன்பு நின்றது. துதிக்கையால் சீடனை வளைந்து சுருட்டியது.

பின்பு அப்படியே தூர வீசி எறிந்தது. என்ன ஆச்சரியம்! தூக்கியெறியப்பட்ட சீடன் அதிஷ்டவசமாக ஒரு வைக்கோல் போரில் போய் விழுந்தான். லேசான காயத்துடன் உயிர் தப்பினான். ஆனால் அவனுக்குள் ஏகப்பட்ட குழப்பம். என்ன நடந்தது என்று புரியவில்லை.

அப்போது அங்கே வந்த குருவும் மற்ற சீடர்களும் அவனை ஆசுவாசப்படுத்தி, அவனது வீட்டுக்கு அழைத்துச் சென்றனர். அந்த நேரத்திலும் சீடன் "குருவே! கடவுள் எங்கும் இருக்கிறார் என்கிறீர்கள். ஆனால் யானை என்னை என்ன செய்துவிட்டது பார்த்தீர்களா?" என்று புலம்பினான். "கடவுள் எங்கும் இருக்கிறார் என்று நான் சொன்னது உண்மை. அவர் யானை வடிவத்தில் இருக் கிறார். சரி உன்னைத் தள்ளிப்போகச்சொல்லி எச்சரித்தது யார் என்று நினைத்தாய்? அவர் கடவுள் என்பதை நீ உணரவில்லை?" குரு கேட்க, சீடன் குழப்பம் நீங்கி தலைகுனிந்து நின்றான்.

சு.நிலக்சியா
தரம் - 4A.
மட்/கிரான்குளம் சரஸ்வதி வித்தியாலயம்.
'சரவணா சிறுவர் கழகம்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | 6 |
| 7 | | 9 | | 11 | 12 |
| | 14 | 15 | 16 | 17 | |
| 19 | 20 | 21 | 22 | | 24 |
| | 26 | | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | | 36 |


A.L.முன்தசிர் அஹமட்
தரம் - 4
மட்/மம/காங்கேயனோடை இக்றா வித்தியாலயம்.
'ஜாமியா சிறுவர் கழகம்'


**இடமிருந்து வலம்**

01. கல்வியை வழங்குவதில் அதிக பங்களிப்பு செய்யும் இடம்.
11. உடலை மறைப்பதற்கு இது உதவும் (குழம்பியுள்ளது).
14. வியாபாரத்தில் முக்கிய இடம்பெறும் இது பாடங்களிலும் ஒன்று.
19. அதிக ஈடுபாடு (குழம்பியுள்ளதுடன் திரும்பியுள்ளது).
28. காட்சியின் ஒத்த சொல் (குழம்பியுள்ளது).
31. மனிதர்களிடம் இருக்கக்கூடாத ஒரு பண்பு (குழம்பியுள்ளது).

## மேலிருந்து கீழ்

01. கொடையில் சிறந்த மன்னன்.
03. தொண்டு செய்தலை நோக்காகக் கொண்ட இயக்கம்.
06. விருப்பம்.
11. மழையிலும் வெயிலிலும் பயன்படும் ஒன்று.
14. பாதுகாப்பிற்காக அணியும் உடை.
16. திறமையின் வெளிப்பாடு (குழம்பியுள்ளது).
24. திறமைக்குக் கிடைக்கும் வெகுமதி (குழம்பியுள்ளது).

**இக் குறுக்கெழுத்துப் போட்டிக்கு சரியான விடையினை 2012.01.20ம் திகதிக்கு முன்பு "சிறுவர் பாதுகாப்பு பிரிவு", பிரதேச செயலகம், மண்முனைப்பற்று எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கும் சிறுவர்கள் குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்பட்டு அதில் முதல் மூன்று சிறுவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சன் அச்சகம் - 065-2222597